உ

கடவுள் துணை

புகழேந்திப்புலவரவர்கள் இயற்றிய

பெரிய எழுத்து

# துரோபதை குறம்



A. இரங்கசாமி முதலியார் சன்ஸ்


சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1934 [அண

உ

கடவுள் துணை

# துரோபதைகுறம்

விருத்தம்

திருந்தியகுழல்பாஞ்சாலி செல்வத்துரோபதையாமங்கை
பெருந்திருவாள் தன்பக்கல் பேசியகுறத்தைப்பாட
பொருந்தியசெல்வசெம்பொற் பொன்மலைவாழுங்கங்கை
தருந்தியமுகமனைத்தும் தாமதுதிசெய்வீரே.

ஆதியேயரியேபோற்றி அச்சுதாபோற்றிபோற்றி
சோதியேபோற்றிபோற்றி சுடரொளிவிளக்கேபோற்றி
நாதனேவள்ளிபங்கா நாரணன்மருகாபோற்றி
காதலாய்க்குறத்தைப்பாட கந்தனேயருள்செய்வாயே.

பஞ்சபாண்டவர்கள்தேவி பாஞ்சாலிபாவைதானும்
வஞ்சகன்துரியனாலே வனவாசம்பன்னிரண்டும்
தஞ்சமாய்க்கழிந்தபின்பு தானுமேவிராடதேசம்
வஞ்சியுமன்னர்கூட வந்துமேதோன்றினரே.

பரமசிவம்

கலிவிருத்தம்

மஞ்சுலவுபாஞ் சாலன் நன்மா நகர்
விஞ்சு துரோபதை மேற்சிறு நற்குற
வஞ்சிமாலை வழுத்தவேதிங்களார்
செஞ்சடிலன் றிருவடிவாழ்த்துவாம்.

விநாயகர்

பொன்னுமாமணிப் பூங்குழற்பொற்பின
டுன்னுபாஞ்சாலி வஞ்சிக்குறஞ்சொலப்
பன்னுதும்பையும் கொன்றைப்பனிமதி
மின்னும்வேழ முகவனைவேண்டுவாம்.

## அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

திங்களறுகரவணியுஞ் சடையிலங்குபொன்முடியுஞ்
செயித்தீர்தன்மர்
தங்கவதனந்தயங்க நான்மறையுஞ்சயசயவென்
றேத்திப்போற்றிப்
பொங்கமுடனின்ற கல்லோய்தமியனுக் கிந்நூற்குறம்
புளகம்பூப்பப்
பங்கமரவென்னவி லிருந்துபொருண் மாறுதுவருள்
பாலிப்பாயே.

### வேறு

திருந்துபொழில்பாஞ்சாலி சீர்கதைதமிழிற்பாட
பெருந்திருவாள்பாதம் பெட்புடன்வணங்கியேத்தி
பொருந்தியநூறுவண்ணம் புகல்குறவஞ்சியாக
வருந்தியேயிந்தக்காதை வளம்பெறப்பாடுவாமால்.

### காப்பு

வெண்செந்துறை-விநாயகர் துதி

விக்கினவிநாயகரே வேலவரேமுன்னடவும்
சத்திவிநாயகரே சரிந்தவயிற்றோனே
அந்திபகலுமும்மை அன்பாகநான்மறவேன்
முந்திமுந்தியெந்தனுக்கு முன் நடக்கவேண்டுமையா
ஒருகையில்மோதகமும் ஒருகையில்செங்கரும்பும்
ஒருகையில்தேங்காயும் ஒருகையில் நற்கரும்பும்
இத்தனைபெற்றுமல்லோ இருந்தீர்மரத்தடியில்
உம்மைக்கண்டுபரமசிவன் கருத்தில் நினைவாகி
விக்கினரும்வேலவரும் இருவரும்வாருமென்றார்
அந்தவுரைகேட்டு அடிதொழுதீரிருவர்களும்
பரமசிவன்பார்த்துப் பார்வதியைக்கண்காட்டி
பிள்ளைகளைத்தான்பார்த்துப் பூரிப்பாயேதுசொல்வார்
ஈரேழுலகமெல்லாம் இருவருஞ்சுற்றிவந்தால்
சுற்றிவந்து நின்றவர்க்கு இந்தக்கனிதருவேன்
என்றவுரைகேட்டு எழுந்தாரேவேலவரும்
பச்சைமயிலேறிப் பாரெல்லாம்சுற்றிப்போனார்
அப்போதுநீரெழுந்து அரனுரைச்சுற்றிவந்தீர்
ஈரேழுலகங்களெல்லாம் இவர்தானேதெய்வமென்று

சுற்றிவந்தபாவனையை மெத்தெனவேதானறிந்து
சந்தோஷப்பட்டுமல்லோ கொடுத்தார்கனியுமக்கு
கானமயிலேறிக் கடலேழுலகமெல்லாம்
எல்லையெல்லாஞ்சுற்றிவந்து ஏமார்ந்தவேலவரும்
கர்த்தருடையகைதனிலே கனிபெற்றுவந்தவரே
கனிபெற்றுவந்தவரே காருமையாவிக்கினரே
துரோபதையாள்குறத்தைத் தொல்லுலகில்யான்பாட
பாஞ்சாலிதன்குறத்தைப் பார்தனிலேயான்பாட
பாடவருள்புரியும் பார்வதியாள்புத்திரனே
சொல்லவருள்புரியும் சிவசங்கரனார்புத்திரனே
அருள்புரியவேண்டுமையா ஆண்டவாயெந்தனுக்கு

## முருகர் துதி

ஆறுமுகம்படைத்த அரனார்திருமகனே
சரவணப்பொய்கைதனில் வந்துதித்தசண்முகனே
அசுரருடல்பிளக்க அவதாரமானவரே
கானமயிலேறும் கர்த்தருடபுத்திரரே
பச்சைமயிலேறும் பார்வதியாள்புத்திரரே
புள்ளிமயிலேறும் வள்ளிமணவாளா
வள்ளிமணவாளா வந்தெனையாளுமையா
அக்கினியில்வந்துதித்த ஆரணங்குதுரோபதையாள்
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அபிஷேகபத்தினியாள்
பத்தினியாள்தன்கருத்தைப் பாருலகில்பாடுதற்கு
கர்த்தருடபுத்திரரே கடுகவந்துகாருமையா
கதைகளதுதப்பாமல் காருமையாவேல்முருகா
பாட்டுதவறாமல் பட்சமுடன்வந்தருளும்
வாக்குதவறாமல் வர்னமுகம்பாரும்

## சரஸ்வதியம்மன் துதி

வராகவதாரங்கொண்ட மகாவிஷ்ணுதன்னுடைய
நாபிக்கமலந்தனில் வந்துதித்தநான்முகனார்
நாவிலிருப்பவளே நற்கருத்தையுண்டுபண்ணும்
மாயன்மருமகளே வந்தெனக்குமுன்னடவும்
தாயேசரஸ்வதியே சங்கரியேமுன்னடவும்
பஞ்சவர்கள்பத்தினியாள் பாவைகுறமுரைக்க
வஞ்சனைகளில்லாமல் வந்தெனக்குமுன்னடவும்
சொல்லுதவறாமல் சொல்வார்த்தைகுன்றாமல்

எடுதவருமல் எழுத்தாணிசாயாமல்
நாவுதவருமல் நட்டத்துமம்மாயிக்கதையை
தப்பிதங்கள்வாராமல் சங்கரியேகாருமம்மா
கார்க்கக்கடனுனக்கு கர்த்தருடதேவியரே
பாடவெனக்கருளும் பாரளந்தான்மருமகளே
சொல்லவருள்புரியும் சுந்தரியேயெந்தனுக்கு
கடல்வண்ணன்மருமகளே கைதொழுதுபாடுகிறேன்

---

## கதையின் வரலாறு

---

பட்டணமாம்பட்டணமாம் இந்திராபுரிபட்டணமாம்
இந்திராபுரிபட்டணத்தை யிருந்தரசுயாளுகையில்
பட்டணத்தையாளுகின்ற பஞ்சவர்களைவருண்டு
கோணுதமாதவத்துக் குந்தியம்மாள்தாயாரும்
தோராவடிவழகி துரோபதைநாயகியும்
அருச்சுனனார்தேவியர்கள் அனைவருமொன்ருக
எல்லவருமொன்ருக யிருந்தரசாளுகையில்
அத்திபுரமாளும் அரவக்கொடியோனும்
நூலார்கடுந்திரளார் நூற்ருெருவர்தம்பிகளும்
கருணன்சகுனியுங் காங்கேயருள்ளவரும்
சிற்றப்பாவிதுரனும் சீருள்ளமற்றவரும்
பாட்டனார்வீஷ்மரும் பாரியதுரோணருமாய்
எல்லவருமாக எல்லையுலகாளுகையில்
அத்திபுரமாளு மரவக்கொடியோனும்
அம்பலத்துவாசலிலே அனைவருக்குமேதுசொல்வான்
என்-பங்காளிபஞ்சவர்கள் பாருலகமாளுகிருர்
ஐவரையும்நான் துரத்தி ஆளவேண்டும்சீமையெல்லாம்
இப்படிக்குச்சொல்லியல்லோ எழுதினன்ஒலையொன்று
விதுரனைப்போகவிட்டு ஐவரையுந்தானழைத்து
மாயத்தால்சூதாடி மண்ணுறுகமண்பறித்து
மன்னர்சபை நடுவே மாதைத்துகிலுரிந்து
கொற்றவர்கள்சபையில் கோதையைத்துகிலுரிந்து
பண்ணுதகோலமெல்லாம் பண்ணியந்தப்பஞ்சவரை
காட்டாதகோலமெல்லாங் காட்டியந்தப்பஞ்சவரை

பன்னிரண்டுதன்வருடம் பாரவனவாசம்செய்து
பதின்மூன்றுந்தன்வருஷம் அக்கியாதவாசஞ்செய்து
உருவந்தெரியாமல் வொளித்துமிகத்தானிருந்து
பதினாலாந்தன்வருஷம் பிறந்தபிறகாக
பதினெட்டாநாளையிலே படைபொருதுஞ்சண்டையிலே
ஆடிப்பறக்கும் அடர்ந்தசமர்க்களத்தில்
எங்கள்முடிகளெல்லா மிரங்கும்படியடித்து
வண்ணடிசித்திநாங்கள் மாண்டபிறகாக
வந்துமேநீங்களெல்லாம் வாழுமரசாண்டு
என்றுமவனுரைத்தான் எரிநாகங்கொண்டவனும்
அந்தவுரைகேட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவரு மாரணங்குதுரோபதையும்
அப்படியேநல்லதென்று ஆரணியம்போய்நடந்தார்
வனமாய்வனந்தாண்டி வந்தாரிருண்டவனம்
அந்தவனத்திலே ஆணழகர்பஞ்சவர்கள்
பர்னசாலையுண்டுபண்ணிப் பஞ்சவர்கள்தானிருந்தார்
பண்ணையதுகலவைப் பரட்டைபுளிக்கருணை
துப்பைபுளிக்கருணை தூதுவளைமுள்கீரை
கிள்ளிசமைத்துமவர் காலங்கழித்தார்கள்
இப்படியாயங்கே யிருந்தார்சிலகாலம்
மற்றுஞ்சில்காலம் சென்றபிறகாக
இராமரிஷிநாவாலே நால்வருந்தான்மாண்டார்
தருமரவர்பார்த்து தான்புலம்பும்வேளையிலே
நாராயணர்வந்து எழுப்பினார் நால்வரையும்
ஆயருடபுண்ணியத்தா லங்கேபிழைத்தார்கள்
மற்றுமொருவனத்தில் வந்துமவர்வாசம்பண்ணார்
அங்கேயும்பட்ட அவதிகள்மெத்தவுண்டு
பத்துவருஷமுமே பட்டார்வெகுபாடு
பத்தாம்வருஷத்திலே பாஞ்சாலியேதுசொல்வாள்
ஐவரையும்தெண்டனிட்டு ஆரணங்குகேட்கலுற்றாள்
ஐவருங்கேளுங்கள் அடியேனொருவார்த்தை
அத்திபுரமல்லோ அரவக்கொடியோனும்
சீமையும்பூமியுந் தேசத்தில்நெல்விளைவும்
எப்படிக்கிருக்குதென்று நான்பார்த்துவாறேனையா
போகவிடைதாருமென்று துரோபதைகேட்கலுமே
தக்கப்புகழுடைய தருமரவரேதுசொல்வார்

அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
ஐவருக்குந்தேவியரே ஆரணங்குநீர்கேளும்
பங்காளிவாசலுக்கு நீபோகநீதியுண்டோ
தாயாதிவாசலுக்குத் தனியாகப்போகலாமோ
போனவிடந்தனிலே பொல்லாங்குதானடந்தால்
வந்துயெமக்குரைப்பார் ஆர்காணுமங்கையரே
சொல்லுந்துரோபதையே யென்றுமவர்கேட்க
அப்போதுதுரோபதையா ளாரணங்குயேதுசொல்வாள்
இவ்வேஷமாகவேநான் போவேனேமன்னர்களே
கொச்சைக்குறத்தியைப்போல் போவேனன்மன்னர்களே
மலைக்குறத்தியைப்போலாக நான்வடிவெடுத்துப்போனால்
அத்திபுரந்தனிலெனக்கு அவகேடுவந்தாலே
ஆலிலைமேல்பள்ளிகொண்ட மாயர்துணையாவார்
கூர்மாவதாரங்கொண்ட கோபாலர்கார்த்திடுவார்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டா [ள்
ஆணலழகுமன்னர் ஐவருந்தான்பார்த்து
ஆரணங்குதுரோபதைக்கு ஐவருந்தாமுரைப்பார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
பாஞ்சாலன்யெக்கியத்தில் வந்துதித்தபைங்கிளியே
உந்தன்மனதுப்படி உத்தமியேசெய்யுமென்றார்
உன்-சித்தத்துக்கேற்றபடி உத்தமியேசெய்யுமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையாள்
அர்ச்சுனராசாவை ஆரணங்குதானழைத்து
இருவருமாகவல்லோ இளந்தோப்பில்வந்தார்கள்
உருத்திராட்சமரத்தடியில் உட்கார்ந்திருவருமாய்
தோராவடிவழகி துரோபதையாள்கூந்தலதை
அருச்சுனராஜரவர் அவர்கையில்தான்கோதி
சீவிசிணுக்கறுத்து சிமிழ்போலக்கொண்டையிட்டு
வாரியகூந்தலதை வண்ணமுடிகொண்டையிட்டு
கொண்டைக்கழகாகக் குச்சிமிகச்சொருகி
வகையாயிரம்பெற்ற வான்சவுரியுட்சொருகி
ஆயிரம்பொன்பெற்ற அணிசவுரியுட்சொருகி
கொண்டையின்மேல்பூவும் குடமல்லிதான்முடித்து
மல்லிகைமுல்லையும் மருக்கொழுந்துதான்முடித்து
ஆணழகிகண்களுக்கு அஞ்சனமையெழுதி
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிபொட்டுமிட்டு

சிரானநெற்றியிலே திலகமிகவணிந்து
காதுக்கழகாகக் கம்மலதுசோடித்து
தங்கத்தால்கம்மல் தையலர்க்குக்காதிலிட்டார்
பக்கத்திலொன்னப்பூவும் பச்சைக்கல்நல்முருவும்
கொப்புமயிர்மாட்டி கோதையர்க்குத்தானணிந்தார்
ஒண்டிபச்சைதொங்கவிட்டு ஒருகல்புதைத்திருக்க
முகத்துக்கழகாக மூக்குத்திதானணிந்தாள்
மாருக்கழகாக மார்பதக்கம்தாவடங்கள்
பலகாரைக்கோத்ததொரு பருத்தநல்லதாவடங்கள்
அழகுப்பலகாரை அழகானத்தாவடமாம்
கொத்துப்பலகாரை கோர்வைமணித்தாவடமாம்
அக்குமணிகொக்குமணி அழகானபாலமணி
பச்சைமணிபாலமணி பலவகையானபாலமணி
உட்கழுத்தில்கொஞ்சுமணி தரித்தாளேயுத்தமியாள்
கைகட்டுஞ்சரிவளையல் கைநிறையக்குறவளையல்
முன்கைமுழங்கை நிறையக்குறவளையல்
ஐந்துவிரலுக்கும் அழகானமோதிரங்கள்
குறவரிடமோதிரங்கள் தரித்தாளேகொம்பனையாள்
கறுப்புநல்லதட்டிசேலை கட்டினாள் துரோபதையும்
குறத்திவடிவானாள் கொம்பனையாளப்போது
ஆணலழகுமன்னர் அருச்சுனரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதைநாயகமே
கொம்பனையேயுந்தனுக்குக் குறக்கூடைவேண்டுமல்லோ
கோபாலரைநினைத்தால் வருமென்றார்கூடையது
அப்போதுதுரோபதையாள் ஆயரைக்கைதொழுதாள்

குறம்

துரோபதை மாயவரைக் கூடைகேட்பது

தினதெந்தின தினதெந்தின தினதெந்தின தினன
தென்னதி நாதினன தினதெந்தின தினன.

மகாதேவருக்குமச்சினரே மாயவரேசுவாமி-ஐயா
வைகுந்தவாசவரே வந்தெனக்குஅருளும்
அண்டமளந்தவரே ஆனந்தரூபா-சுவாமி
ஆதிநாராயணரே வந்தருளவேண்டும்
நரசிம்மாவதாரங்கொண்ட ராமபத்திரசுவாமி
இலட்சுமிக்குமணவாளா எனக்குவந்தருளும்

இரணியனை மார்பிளந்து வகுந்துதிரங்குடித்தீர்
ஈரேழுலகமெல்லாம் நிறைந்தவரேவாரும்
இராவணனை யுடல்பிளந்து சீதைசிறைமீட்டீர்-சுவாமி
நலமானவிபீஷணர்க்குப் பட்டமதுதந்தீர்
அன்றொருநாள் திரியோதிரன் சபைதனிலே நானும்
அலரும்போதெந்தனுக்குத் துகிலாடைதந்தீர்
இன்றொருநாளெந்தனுக்கு வந்துமிகவருளி
இசையானகுறக்கூடை எனக்குத்தரவேணும்
நினைத்தகுறி நானுரைக்க நல்லசெம்பொன்கூடை-நல்ல
நீலவர்னமாயவரே எனக்குத்தரவேணும்
அவரவர் நினைத்தகுறி நானறிந்துசொல்ல
அழகானகுறக்கூடை தந்தருளவேண்டும்
ஆறுமுகம்படைத்த வேலவரேமுருகா-சுவாமி
அடிமைவள்ளிகுறக்கூடை எனக்குத்தரவேணும்
தேவேந்திரனார்மகளை மணம்புரிந்தவேலா
தெய்வானை குறக்கூடை தந்தருளும்சுவாமி
குறவரிடபெண்கொண்ட குமரேசன்முருகா
மறவரிடபெண்கொண்ட மாயவனார்முருகா
மாதுவள்ளிகுறக்கூடை எனக்குத்தரவேணும்
அக்கினியில்வந்துதித்த ஐவருக்குந்தேவி-அவள்
ஆயரையும்வேலரையும் கைதொழுது நின்றாள்
ஏழுலகமளந்தவரும் ஈஸ்பரனார்மகனும்-அங்கே
இவர்களுமனமிரங்கி கூடைதனையனுப்ப
வச்சிரத்தால்மாணிக்கத்தால் வாறுகட்டுங்கூடை-அது
வைடூரியமரகதத்தால் வறம்புகட்டுங்கூடை
முத்துரத்தினபச்சைகளால் முழுதுங்கட்டுங்கூடை-அது
முழுநீலமாணிக்கத்தால் அணிகள்கட்டுங்கூடை
கனத்தநல்லகுறிசொல்லுங் காட்சிதருங்கூடை-அது
கைலாசயீஸ்வரனார் காட்சிபெருங்கூடை
இத்தனைக்குநலமான கூடைதனையெடுத்து-அவர்
எகறவிட்டார்பாஞ்சாலி கையில்விழவென்று
அந்தநல்லகூடையது ஆகாயஞ்சுற்றி-அது
ஆணழகிகைதனிலே வந்துவிழுந்ததுவே

வேறு

ஆதிநாராயணரை அடிவணங்கித்தெண்டனிட்டு
திருத்தணிகைவேலவரைத் தீர்க்கநமஸ்கரித்து

கூடையதுவாங்கி கொம்பனையாளப்போது
வச்சிரமணிகூடைக்குள்ளே வைத்தாள்பலவகைகள்
மருந்துவகைகளிலே மலைவேப்பங்கொட்டைவைத்தாள்
புலியினது நகமும் புகழானவேர்வகையும்
நரிப்பல்நரிமுகமும் நல்லமருந்துகளும்
ஆண்வசியம்பெண்வசியம் ஆனமருந்துகளும்
முதுமையுள்ள ஆண்பெண்ணுக் கிளமைவரமருந்துகளு
முகங்கொண்டஜன்னிதீர மூலமலவேப்பம்வேர் [ம்
பல்நோவுதந்தவாய்வும் தீரமருந்துவகை
மார்நோவும்பித்தவாய்வும் மாளநல்லவேர்வகைகள்
வயிற்றுவலிதனக்கு ஏற்றமருந்துவைத்தாள்
கால்வலிகைவலிக்கு கனத்தமருந்துவைத்தாள்
பட்டோலைதன்னாலே முடைந்தகிலுகிலுப்பை
ஈச்சங்குறுத்தோலை இசைந்தகிலுகிலுப்பை
தாழங்குறுத்தோலை தகுந்தகிலுகிலுப்பை
கொடிக்கயறுதாம்புக்கயறு குழந்தைகட்டேணக்கயறு
அடுக்கநிலவுரிகள் அழகானசிற்றுரிகள்
பிரிமணைகள்சிம்மாடு பிரப்பங்கோல்தானமைத்தாள்
எண்ணைக்குடுக்கைகளும் ஈச்சங்கோல்தாழைநாரும்
பார்த்துக்குறியுரைக்கப் பலகாரக்கட்டுகளும்
கண்டுகுறிப்புரைக்கக் கனத்தவேர்மூலிகையும்
இத்தனையும்கொண்டுமல்லோ எடுத்தமைத்தாள்கூடையி
கட்டுவச்சிபோலாகக் கக்கத்தில்கூடைவைத்தாள் [லே
இடப்பக்கம்கூடைவைத்து வலக்கையில்கோல்பிடித்து
மலைக்குறத்தியைப்போல மாதுமிகவெழுந்தாள்
அன்னநடைதுரோபதையாள் அசைந்துநடக்கையிலே
காண்டாவனமெரித்த காளையவர்பார்த்து
குறத்தியருகில்வந்து கோபாலர்மைத்துனரும்
குஞ்சிரிப்புகொண்டுமவர் குலுங்கநகைநகைத்து
கட்டியணைத்துக் கனிவாயமுத்தமிட்டு
சேர்த்துமவரணைத்து செங்கனிவாய்முத்தமிட்டு
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார்
தருமரும்வீமருமே தம்பிமாரிருவர்களும்
காணவேண்டுமென்று கட்டழகிவாருமென்றான்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையும்
அப்படிக்கேநல்லதென்று ஐவர்க்குமுன்னேவந்தாள்

ஐவர்பஞ்சபாண்டவர்கள் அருங்கிளியைத்தான்பார்த்து
சந்தோஷப்பட்டுமல்லோ சரீரங்கள்பூரித்து
நீலக்குழலாட்கு நிலங்கிள்ளிக்காப்புமிட்டு
ஐவருங்கூடியல்லோ ஆரணங்குக்கேதுசொல்வார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
மலைக்குறத்திபோல வடிவெடுத்து நீபோறாய்
போரவிடந்தனிலே பொல்லாங்குநேர்ந்தாலே
செல்லுமிடந்தனிலே தீவினைகள்வந்தாலே
ஆரைநினைத்திடுவாய் ஆரணங்கேசொல்லுமென்றார்
எவரைநினைத்திடுவாய் எந்தனுக்குச்சொல்லுமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குயேதுசொல்வாள்
பங்காளிசீமையிலே பாங்காகவந்ததென்றால்
மன்னர்சபைநடுவே மாளாத்துகிலளித்த
மாளாத்துகிலளித்த மாயர்வந்துகாத்திடுவார்
ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஆயர்வந்துகாத்திடுவார்
என்றுமவளுரைத்து ஏந்திழையாளேதுசெய்தாள்
சகாதேவராசாவை சடுதியிலேதானழைத்து
அருகில்நிறுத்தியல்லோ ஆண்டவரைக்கைதொழுதாள்
மாபெலிக்குமண்ணளந்த மாயவரே நான்சரணம்
ஆனைமுறையிடவே அன்றுவந்துகாத்தவரே
காளிங்கநல்மடுவில் காணாய்ந்தசற்பத்தில்
கூத்தாடிநின்றவரே கோவிந்தாவந்தருளும்
மோகினிவேஷங்கொண்டு முக்கண்படைத்தவர்க்கு
காமங்களுண்டுபண்ண கரிமுகவாவந்தருளும்
மாது நான்வருந்துகையில் மாயவரேவந்நருளும்
கோதைநான்வருந்துகையில் கோபாலாவாருமையா
என்றுமவள்முறையிடவே எம்பெருமாள்தானறிந்து
கெருடன்மேலேறியல்லோ கோபாலரும்வாராரே
வட்டமாங்கருடனேறி வந்துவிட்டார்மாயவரும்
பாஞ்சாலியருகில்வந்து பாரளந்தாரேதுரைப்பார்
ஏதுக்கெனையழைத்தாய் என்பிறப்பேதங்கையரே
அழைத்தநல்லகாரியத்தை ஆரணங்கேசொல்லுமம்மா
அப்போது துரோபதையாள் ஆயருக்கேதுசொல்வார்
அத்திபுரம்நான்போய் ஐவரையும்பார்க்கவேணும்
மலைக்குறத்திவேஷங்கொண்டேன் மைந்தரருகிலில்லை
கைக்குழந்தைவேணுமென்றாள் கரிமேகஅண்ணாவே

ஐவர்க்கிளையவரை அருச்சுனனார்தம்பியரை
சாயாம்புமேனியரை சகாதேவராஜாவை
எனக்குக்குழந்தையாக எம்பெருமானுண்டுபண்ணும்
கைக்குழந்தைபோலேயல்லோ கரிமேகாவுண்டுபண்ணும்
என்றுமந்தப்பாஞ்சாலி எம்பெருமானைக்கேட்க
மாயர்மனமிரங்கி மைந்தர்வடிவுதந்தார்
அருச்சுனனார்தம்பியரை ஆண்குழந்தையாக்கிவிட்டார்
இளையசகாதேவன் ஏந்துங்குழந்தையானான்
மாயரருளாலே மைந்தன்வடிவுகொண்டான்
கோபாலர்தன்னருளால் குழந்தைவடிவெடுத்தான்
அப்போதுதுரோபதையாள் ஆயரைக்கைதொழுது
மாயர்பாதம்பணிந்து மைந்தனைத்தானெடுத்து
மலைக்குறத்திபோலாகக் கட்டினாள்பாலகனைக்
கூடையிடுக்கிவைத்தாள் குழந்தையைமுதுகிலணிந்தாள்
கையில்பிரம்பெடுத்துக் கட்டுவச்சிபோலாக
பொன்னுமலைக்கட்டுவச்சி போலேயவள்நடந்தாள்
அன்னநடைநடந்து அருங்கிளியாள்போகலுற்றாள்
பஞ்சவரும்மாயவரும் பார்த்துமனமகிழ்ந்தார்
காரிகையாள் நாயகியைக் கண்டுமனமகிழ்ந்தார்
தோராவடிவழகி துரோபதையாளப்போது
ஐவருக்கும்மாயருக்கும் அடிவணங்கித்தெண்டனிட்டாள்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டா
ஐவர்களுந்தான்பார்த்து அழகாகவதுசொல்வார் [ள்
காரிகையாள் துரோபதைக்குக் கண்ணெச்சலாமென்று
ஏழுலகமாளுகிற எம்பெருமாளப்போது
பூமியைக்கிள்ளியல்லோ பொட்டிட்டார்துரோபதைக்கு
திருஷ்டிசுழட்டியவர் தெருவெங்கும்விட்டெறிந்தார்
மாயவரும்ஐவரும் மனதுமிகக்குளிர்ந்து
போய்வாருமென்றுசொல்லி புகழவிடைகொடுத்தார்
விடைப்பெற்றுப்பாஞ்சாலி விடுபட்டாளந்நேரம்
போறாளே துரோபதையாள் பூமணக்கவேர்மணக்க
மைந்தனைமுதுகணிந்து மயிலனையும்வாறாளே
குழந்தைமுதுகணிந்து கூடையிடுப்பில்வைத்து
பிரப்பங்கோல்கைபிடித்து பெருமையுடன்வாறாளே
இஞ்சிவனந்தாண்டி யெலுமிச்சஞ்சோலைவிட்டு
மஞ்சள்வனந்தாண்டி மாதளம்பூசோலைவிட்டு

ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
காரைபெருத்தவனம் காட்டுகிளாப்பூத்தவனம்
சூரைமுளைத்தவனம் சுண்டைக்காய்காய்க்கும்வனம்
அல்லியுந்தாமரையும் அடர்ந்தவனந்தாண்டி
கோகிலமுந்தாராவுங் குலாவும்வனந்தாண்டி
அன்னமுந்தாராவும் அரையும்வனந்தாண்டி
அத்திபுரந்தேடி வந்தாளே ஆணழகி
தாமமுடியாளும் தல்லாடன்வீதிவிட்டு
கட்டழகிதுரோபதையாள் கருணரிடவீதிவிட்டு
சாமத்துரோகியல்லோ சகுனியுடவீதிவிட்டு
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்வீதிவிட்டு
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்வீதிவந்தாள்
அந்தத்தெருக்களிலே வாழ்கின்றமன்னரெல்லாம்
இளமைமுதுமையுள்ளோ ரெல்லோருந்தான்சேர்ந்து
வயதுசென்றமன்னர்களும் வாலிபவீரர்களும்
எல்லாருமொன்ருக இவளைவந்துசூழ்ந்தார்கள்
நரைத்தபழங்களெல்லாம் நாடிவந்தியேதுசொல்வார்
கானக்குறத்தியரே கட்டுவச்சிநாயகமே
மலையிற்குறத்தியரே மயிலணையே நாயகமே
எங்களிடமாளிகைக்கு ஏகிவந்தாயாமாகில்
வர்னமானமாளிகைக்கு வந்திருந்தாயாமாகில்
நீர்ஆடுங்கழலாடி அம்மானுர்தானுடி
பந்தாடிசெண்டாடிப் பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் ஊஞ்சல்மிகவாடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிபோல்வீற்றிருப்பாய்
சொக்கட்டான்சூதாடி சுகமாகவாழ்ந்திருப்பாய்
எங்களிடபெண்டுகளை உனக்கேவல்செய்துவைப்போம்
ஆணுய்ப்பிறந்தவர்கள் ஆளபணிசெய்திருப்போம்
தேவாமுர்தம்நீ தேவையென்றுசொன்னாலும்
கொண்டுவந்துதான்கொடுத்து கும்பிட்டுவீற்றிருப்போம்
பாலும்பழமுமுண்டு பஞ்சணைமேல்படுத்து
கட்டிலின்மேல்வீற்றிருந்தால் கால்பிடித்துநாமிருப்போம்
பஞ்சணையின்மேல்நீயிருந்தால்உன்பாதம்பிடித்திருப்போ
மனையாளிடவார்த்தை மாயமாய்க்கேட்டதில்லை [ம்
பெண்களிடவார்த்தை பிரியமென்றுகேட்டதில்லை
உன்சொல்லைமேலாக யெண்ணிமிகநடப்போம்

உன்-மனதுக்கிசைந்தபடி நடப்பேண்டிகட்டுவச்சி
வாராயோபெண்மயிலே என்றுமவருரைத்தார்
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குயேதுசொல்வாள்
மலைக்குறத்திபோலாக மயிலிணையாளேதுரைப்பாள்
கூவுங்குயில்போலே கொம்பனையரளேதுரைப்பாள்
வாய்திறந்தமன்னருக்கு மறுவார்த்தைசொல்லுகிருள்
இன்னம்பலமிருகங்கள் எடுத்துக்கறிசமைப்போம்
ஏச்சானசாதியல்லோ எங்கள்குறச்சாதி
நல்லகுலந்தனிலுதித்த ராசாக்களுமானுல்
நாட்டிலுள்ளகுறத்திகள்மே லாசைவைக்கலாமோ
ஒருவன்பெண்டைமற்றொருவன் நத்திவந்தானுனல்
உலகளந்தார்தன்னருளால் சுவர்க்கமில்லையென்பார்
குருவினிடபத்தினியைக் குறித்துவந்தானுனல்
கோபாலர்தன்னருளால் கூடுமென்பார்நரகம்
அண்ணனுடதேவியரை அடுத்துவந்தானுனல்
அரிராமச்சக்கரமே அவன்தலையையறுக்கும்
இப்படியாயுரைப்பார்கள் ஏழுலகந்தனிலே
எல்லாநீரறிந்தவர்கள் எனைத்தொடலாமோ
கொற்றவரேயுங்களுக்குத் தேவியர்களில்லையோ
கூசாமலுங்களிட மனையிடத்துசேரும்
ஏன்காணும்மன்னர்களே யிப்படிக்குச்சொன்னீர்
என்குறவன்தானறிந்தால் ஏதுபிழைவருமோ
குலமன்னர்நீங்களானுல் குறத்தியைப்பார்த்து
ஐவரானகெந்தருவ ரெனக்குமணவாளர்
அவரறிந்தால்பழுதுவரும் அரசர்களேபோம்போம்
ஏந்தனுக்குஏவல்செய்து எனையாளவந்தீர்
ஏவல்பணிசெய்வதற்கு எட்டுலட்சமுண்டு
ஏழுபேர்ஏந்தனுக்கு சக்களத்திமார்கள்
இன்னமுண்டுஎன்கணவனுக் கெண்ணத்தொலையாது
எங்களதுகுறச்சாதி ஏச்சானசாதி
எங்களுக்குமேலான அரசர்களேகேளும்
வெள்ளெலிகறிசமைத்து விருந்துகளைச்செய்வோம்
விஸ்தாரஆமையுடன் கீரிப்பிள்ளைதின்போம்
கொக்குநாரையுடனடித்துக்கொண்டு கறிசமைப்போம்
கொண்டுமுயல்தான்பிடித்து கொழம்புகள்செய்வோம்
காட்டெருமைபன்றியுடன் கறிசமைத்துத்தின்போம்

கண்டகண்டமிருகமெல்லாம் உப்புக்கண்டமிடுவோம்
பெருச்சாளிதான்பிடித்து பொறியலதுசெய்வோம்
பெரும்பூனையதுபிடித்து விருந்துசெய்வோம்நாங்கள்
பாம்புதின்போம்பல்லிதின்போம் பச்சோணன்சுடுவோம்
பலதினுசுமிருகங்கள் எடுத்துக்கறிசமைப்போம்
ஏச்சானசாதியல்லோ எங்கள்குறச்சாதி
நல்லகுலந்தனிலுதித்த ராஜர்களுமானால்
நாட்டிலுள்ளகுறத்திகள்மே லாசைவைக்கலாமோ
ஒருவன்பெண்டைமற்றொருவன் நத்திவந்தானானால்
உலகளந்தார்தன்னருளால் சுவர்க்கமில்லையென்பார்
குருவினிடபத்தினியை குறித்துவந்தானானால்
கோபாலர்தன்னருளால் கூடுமென்பார்நரகம்
அண்ணனுடதேவியரை அடுத்துவந்தானானால்
அரிராமர்சக்கரமே அவன்தலையையறுக்கும்
இப்படியாயுரைப்பார்கள் ஏழுலகந்தனிலே
எல்லாநீரறிந்தவர்கள் எனைத்தொடலாமோ
கொற்றவரேயுங்களுக்குத் தேவியர்களில்லையோ
கூசாமலுங்களிட மனையிடத்துச்சேரும்
மன்னர்களேவுங்களுக்கு மனையாளுமில்லையோ
மகாராசப்பிள்ளைகளே மனையிடத்திற்போம்போம்
கீரிதின்னுங்குறத்தியின்மேல் ஆசைகொண்டீர் நீங்கள்
கீர்த்தியல்லவுங்களுக்கு எழுந்துநடப்பீரே
ஆமைதின்னுங்குறத்தியின்மே லாசைகொண்டீர் நீங்கள்
அதுமுறையல்லகண்டாய் அணுகாமல்நடவும்
என்றுமவள்மிகவுரைத்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திசாயலைப்போல் இடைதுவளநடந்தாள்

வேறு

அப்போதுபூங்குறத்தி அழகானகட்டுவச்சி
மாலைக்குறத்தி மலைக்குறத்திபோல்நடந்தாள்
மலைக்குறத்திபோனபின்பு மன்னர்மனந்தளர்ந்து
நெஞ்சுலர்ந்துநாவரண்டு நினைவுதடுமாறி
அவரவர்கள்தொழில்மறந்து அசைந்துநடைநடந்து
சாதித்தொழில்மறந்து தானேநடக்கசந்து
பூசைத்தொழில்மறந்தார் புஷ்பமெடுக்கவந்தார்
இருந்தயிடமொழிய எழுந்துநடக்கறியார்
கானக்குறத்தியினால் காமம்பெரிதானார்

மாலைக்குறத்தியினால் மையல்பெரிதானார்
வாய்பேச்சுதான்குளறி மயங்கிவிழுந்தார்கள்
தங்கள் நினைவுகெட்டுத் தான்படுத்தார்பூமியிலே
இப்படியாகவல்லோ யிவரிருக்கும்வேளையிலே
அப்போதுபூங்குறத்தி அந்தத்தெருதாண்டி

## கருணன் வீதி வருகிறது

கருணருடவீதியிலே கட்டுவச்சியேதுசொல்வாள்
வாரதொருபூங்குறத்தி மயில்போலவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொம்பின்கிளியதுபோல்
இவ்வீதிவாழுகிற இளவிசையர்பெண்டுகளே
கைபார்த்துக்கொள்ளலியோ கனத்தகுறிகேட்கிலையோ
பச்சையதுகுத்திக் கொள்ளலியோபைங்கிளிகாள்
உரிகயறுவாங்கலியோ வூஞ்சல்கயறுகொள்ளலியோ
தாம்புகயிறுகொள்ளலியோ தார்வேந்தர்வீதியிலே
ஓலைகிலுகிலுப்பை கொள்ளலையோபிள்ளைகட்கு
ஐங்காயத்தூளதுதான் வாங்கலியோஆச்சியரே
பல்நோவுகாரருக்குப் பச்சிலைகள்கொள்ளலியோ
தாள்நோவுகாரருக்குத் தான்மருந்துகொள்ளலியோ
இப்படியாகக்கூறியல்லோ வாராளேகட்டுவச்சி
அப்பெரியவீதியிலே வாழுமனிதரெல்லாம்
சிறியோர்கள்பெரியோர்கள் சேர்ந்தாரொருபுறமாய்
வாலைப்பிராயமுள்ள ரர்சரெல்லாந்தான்பார்த்து
காமக்குறத்தியரைக் கண்டுமையலானார்
பாவைக்குறத்தியரைப் பார்த்துமிகவணங்கி
குறத்தியழகைப்பார்த்து கொற்றவர்களேதுசொல்வார்
கண்டிரோமன்னர்களே காமக்குறத்தியைப்
பார்த்தீரோராசர்களே பாவையழகுதன்னை
இப்படியாய்ப்பெண்டுகளை எங்கிலும்நான்கண்டதில்லை
தெய்வலோகம்வாழுகின்ற இந்திராணியீடல்லவே
இராமருடதேவி சீதையெதிரல்லவே
அகலிகைமண்டோதரி யாருமெதிரல்லவே
அரம்பையூர்வசி நல்லதிலோர்த்தமையும்
தானியமாலியரும் தகுந்தகருணுவதியும்
இந்தக்குறத்தியற்கு ஈடுசொல்லலாகாது
காமக்குறத்தியற்குக் கட்டுரைக்கலாகாது

இவளழகும்பாவனையும் எங்கிலும்கண்டறியோம்
திருவழகுமொப்பனையும் தேசத்தில்கண்டறியோம்
இப்படியாய்ச்சொல்லியல்லோ எல்லவருமோடிவந்து
மாலைக்குறத்தி மலைக்குறத்திமுன்னேவந்தார்
கானகக்குறத்திமுன்னே வந்துமவரேதுசொல்வார்
ஆரடிகட்டுவச்சி அன்னமேபூங்குறத்தி
எவளோடிகட்டுவச்சி யிந்தத்தெருவில்வந்தாய்
உன்னழகைக்கண்டல்லோ உருகுதடியெங்கள்மனம்
உன்-வடிவழகைக்கண்டலவோ மயங்கித்தவிக்கிறோம்
எங்களுடையமாளிகைக்கு வந்தாயேயாமாகில்
கட்டநல்லபட்டுமுண்டு கழட்டப்பணிதியுண்டு
போடவுடைமையுண்டு பூட்டப்பணிதியுண்டு
அத்தருண்டுபுட்பமுண்டு அதற்கேற்றகட்டிலுண்டு
பூசப்புனுகுமுண்டு புகழானகந்தமுண்டு
அன்னவூஞ்சல்மேலே ஆடலாமெப்போதும்
உன்னைப்பிரியாமல் யுகந்துவிளையாடியிருப்போம்
ஏவல்பணிசெய்து எப்போதும்வீற்றிருப்போம்
என்காணும்கட்டுவச்சி யிளங்குறத்திநாயகமே
வாராயோயெங்களுட வர்னமணிமாளிகைக்கு
என்றுமவர்கேட்க இளங்குறத்திகட்டுவச்சி
மலையாளப்பூங்குறத்தி மன்னவருக்கேதுசொல்வாள்

குறம்

ஏன்காணும்மன்னர்களே இடக்குகளைச்சொன்னீர்
இன்னாட்டில்வாழுகிற குறத்தியல்லகாணும்
பலசாதிகுறத்தியைப்போல் எண்ணியேதானுரைத்தீர்
பரமசிவன்பார்வதிக்கும் கைபார்க்குங்குறத்தி
கானகத்தில்வாழுகின்ற குறத்தியைப்போல்நினைத்தீர்
கந்தருக்கும்வள்ளியற்கும் கைபார்க்குங்குறத்தி
இன்னாட்டில்வாழுகின்ற குறத்தியல்லநானும்
இந்திரற்கும்தேவியற்கும் குறியுரைக்குங்குறத்தி
என்நியாயந்தெரியாமல் அனியாயஞ்சொன்னீர்
இன்னாட்டுக்குறத்தியைப்போல் இடைந்துநடப்பீரே
என்குறவரும்மைக்கண்டால் இப்பொழுதுதன்னில்
இந்தட்சணமுங்கள்மண்டை உருளவடித்திடுவார்
குறவரிடகூட்டமெல்லாம் அடியோடேவந்து

கொற்றவனார்சீமைதன்னைச் சுட்டெறியப்போறார்
குறச்சாதியென்சாதி இழிவானசாதி
கொற்றவரே நானுமக்குக் கட்டுமோதான்சொல்லும்
குறநாற்றமுங்களுக்குக் குமட்டியடியாதோ
கொம்பனையாள்மேலாசை தோன்றுதோதான்சொல்லும்
கருணருடவீதிதன்னில் அதர்மங்களுண்டாச்சோ
கட்டழகர்கூடியேயென் கைப்பிடிக்கவந்தீர்
கருணரிதைத்தானறிந்தால் கடும்பகைகள்நேரும்
காளைகளேயுங்களுக்குக் குடிபழுதுவருமே
இச்சையுடனித்தெருவில் பிச்சைக்குநான்வந்தேன்
எந்தனை நீங்களெல்லாம் பெண்டுக்கழைக்கலாமா
சமுசாரியானவளை வாதாடியேபெண்டழைத்தால்
தன்குடிக்குப்பழுதுவருமென்றெண்ணி நடவும்
ஒருவனுடதேவிதன்னை ஒருவன்நத்தியழைத்தால்
உடனேயவன்தலைக்குப் பழுதுவருமென்றார்
பிறருடையபெண்டுகளைப் பேதப்பட நினைத்தால்
பெருநரகமடைவாரென்று பெரியோர்சொல்லுவார்கள்
இப்படியரயுலகுதன்னில் அறிவழிந்தமாந்தர்
எத்தனையோகோடியுண்டு எனக்குத்தெரிந்தளவும்
ஸ்ரீராமர்தன்னுடைய தேவியருளாலே
தென்னிலங்கைராவணனும் க்ஷணத்தில்மடிந்தானும்
அகலிகைதன்னாலே ஆயிரங்கண்ணுடையான்
அவளாசைதன்னாலே பூனைபோல்கடந்து
உள்நுழையும்வேளையிலே கௌதமருங்கண்டு
ஒப்பாதமனங்கொதித்து மெய்யுடனேயவரும்
தேவேந்திரனென்றறிந்து சீறியந்தமுனியும்
சீக்கிரமாயவன்கேட்க வாக்குரைத்தாரவரும்
இந்திரன்தன் திரேகமெல்லாம் யோனியாகவென்று
இட்டாரேபெருஞ்சாபம் எல்லையுலகறிய
கௌதமர்சாபத்தினால் இந்திரனும்நொந்து
கிலேசங்கொண்டவருடைய பாதத்தில்விழுந்தான்
சாஷ்டாங்கதெண்டனிட்டுச் சரணமென்றுபணிந்து
சுவாமியென்னைக்காருமென்று மிகவணங்கியுரைத்தான்
என்றுமிவன்தானுரைக்கக் கௌதமருமிரங்கி
இந்திரனார்தேகமெல்லாம் விழியாகவென்றார்
அன்றுமுதலின்றளவுங் கௌதமனார்வசையால்

ஆயிரங்கண்ணிந்திரனு ரென்றுசொல்லுமுலகம்
தேவேந்திரன்போனபின்பு கௌதமனூர்தாமும்
தேவியரைத்தானழைத்து மிகவுரைப்பாரவர்க்கு
ஏண்டிபெண்ணேயகலிகையே இந்தமதியுனக்கு
இந்திரன்தன்மேலாசை கொண்டிருந்தாயென்றார்
அந்தவுரைகேட்டுமவள் பயந்துமிகத்தயங்கி
ஆண்டவனேயான்செய்த குற்றமதைக்கேளும்
நித்திரையாலெந்தனுக்கு நினைவுதடுமாறி
நீரென்றுமவரென்று நானறியேனென்றாள்
என்றுமவள்தானுரைக்கக் கௌதமரும்வெகுண்டு
இவளையொருகற்பாவை யாகவென்றுசபித்தார்
இட்டதொருசாபத்தினால் அகலிகையும்பார்த்து
ஆண்டவரேயென்குருவே ஐயாவேசுவாமி
அடியவள்நான்செய்ததொரு குற்றம்பொறுத்தருளும்
இட்டதொருபெருஞ்சாபம் எப்பொழுதுதீரும்
எந்தனுக்குரையுமென்று மிகநோக்கிப்பணிந்தாள்
என்றுமவர்தானுரைக்க மிகமனதில்மகிழ்ந்து
ஈரேழுலகமெல்லாம் ஆளுந்தசரதனூர்
ஸ்ரீராமர்தசரதருக்குப் புத்திரராய்ப்பிறந்து
செல்வமுள்ளபனிரெண்டு வயதுடையநாளில்
இராஜரிஷியானவரும் ஆகாததுவுரைத்து
தசரதனூர்தன்னருகே தேடியவர்வந்து
ஸ்ரீராமலட்சுமணரை அனுப்பவென்றுகேட்க
சுந்தரமானலட்சுமணர் ஸ்ரீராமர்தனையும்
சுந்தரமானலட்சுமணரை இருவரையுமனுப்ப
இராஜரிஷிமனமகிழ்ந்து நலமாகநடந்தார்
இராகவரும்லட்சுமணரும் கூடவேதான்தொடர்ந்தார்
இராஜரிஷிதன்னுடனே மூவருமாய்வந்து
இராமருடன்லட்சுமணரும் வாசஞ்செய்தாரங்கே
இவரிருக்கும்வேளையிலே தாடகைதான்வந்தாள்
இவளாரெனவுரைத்தார் ஸ்ரீராமர்தானும்
எடுத்துரைப்பாரந்நேரம் இராஜரிஷிதானும்
என்னுடையயாகமதைக் கலைக்கவந்தபீடை
இவளுயிரைவாங்குமென்று உரைத்தாரந்தரிஷியும்
குருவுரைத்தவாக்கியத்தைக் கோபாலரறிந்து
கோப்பெனவேவில்லெடுத்துக் குணத்தொனியேசெய்து

தாடகையைவிழவடித்து மாரீசன்தன்னை
தகைமையுடனுயிர்வதைத்துத் தகமையுடனடந்தார்
விஸ்வாமித்திரர்தன்னுடனே வேண்டியிருவர்களும்
விஸ்தாரமானதொரு வழிநடந்தார்மூவர்
மிதிலைப்பதிநோக்கியல்லோ வருகின்றவழியில்
மிதித்தாரேயகலிகையாள் கற்பாறைதன்னை
பாதம்பட்டவுடனே அவள்மேதினியிலெழுந்து
பக்தியுடன்சுற்றிவந்து நமஸ்கரித்தாளவளும்
இராகவருந்தான்பார்த்து இவளாரென்றுரைக்க
இராசரிஷியானவரும் இராகவருக்குரைத்தார்
அப்போதுஅகலிகையும் அண்டமெல்லாம்புகழ
ஆனந்தமாகவந்து கௌதமரைப்பணிந்தாள்
அகலிகைகௌதமருங் கூட்டமுடன்வாழ்ந்து
கோபாலர்போலுஞ்சில பிள்ளைகளும்பெற்றார்
இப்படியாயுலகுதனில் எத்தனையோகோடி
எந்தனைப்பெண்டழைக்கவந்தீர் மன்னர்களேபோம்போம்
ஆணலேகெட்டவர்கள் யாருமில்லையுலகில்
அவகேடுபெண்ணலே வருமென்றுசொல்லுவார்
இப்படிக்குத்தானுரைத்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே யிடைதுவள நடந்தாள்

வேறு

குறத்தியவள்போனபின்பு கொற்றவரெல்லோரும்
மாதுமயலாலே வாடிமனந்தளர்ந்து
தையல்மயலாலே தங்கள்முகம்வாடி
காமன்கணையாலே களைப்பட்டுப்போய்விழுந்தார்
நினைவுதடுமாற நெஞ்சுலர்ந்துவாயுலர்ந்து
படுத்தபடுக்கைவிட்டார் பார்மன்னரெல்லவரும்
குறத்தியவளாலே கொற்றவர்போய்ப்படுத்தார்
மலைக்குறத்திதன்னலே மனதைமறந்தார்கள்
கட்டுவச்சிதன்னலே கைகாலசைந்தார்கள்
தங்கள்குலத்தேவிதன்னைத் தான்மறந்தாரப்போது
ஒருவர்பேருரைப்பார்கள் மறுபேரழைப்பார்கள்
உணர்வுதடுமாறி உற்றசிவன்தான்குலைந்தார்
நினைவுதடுமாறி நித்திலங்கும்பூமுடியார்
திண்டிமறந்து தெருத்திண்ணைபோய்ப்படுத்தார்

குறத்திகுறத்தியென்று கொற்றவர்கள் தாமிருப்பார்
மலைக்குறத்திவந்தாளென்று மன்னனெழுந்திருப்பார்
கட்டுவச்சிவந்தாளென்று கண்ணெடுத்துப்பார்த்திருப்பார்
குறத்திகுறத்தியென்று குலேகுலேவார்மன்னரெல்லாம்
இப்படியாக யிருக்குமந்தவேளேயிலே

திரியோதிரன் வீதி வருகிறது

மாலைக்குறத்தியவள் மலைக்குறத்திகட்டுவச்சி
வேலைப்பழித்ததொரு விழியாள் நடக்கலுற்ருள்
தேசத்தையாளுமந்தத் திரியோதிரன்வீதியிலும்
நூலார்கடுந்திரளார் நூற்றெருவர்வீதிவந்தாள்
வாரக்குறத்தியவள் மயில்போலேவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொம்பின்கிளியதுபோல்
உரிக்கயறுவாங்கலேயோ உத்தமியாள்பெண்டுகளா
சவுரிமயிர்கொள்ளலியோ தார்வேந்தர்பெண்டுகளா
மாப்பிள்ளைக்கேற்ற மருந்துண்டுகொள்வீரோ
புருஷனுக்கேற்ற பொடியுண்டுவாங்குவீரோ
என்றுமவள்கூறியல்லோ வாராளேகட்டுவச்சி [து
அப்போ-திரியோதிரன்வீதியிலே சிலமன்னர்தான்பார்த்
காமக்குறத்தியரைக் கண்டுமயலாகி
இவளார்காண்கட்டுவச்சி இவ்வீதிவந்தாள்காண்
கட்டுவச்சிபேரழகைக் கண்டீர்களோமன்னர்களே
இந்நாட்டுக்குறத்தியல்ல இவ்வீதிவந்தாள்காண்
மேல்நாடதனில்வாழும் குறத்தியைப்போல்காணுது
கெந்தருவர்தேவர்களோ காமனுடபத்தினியோ
தேவேந்திரனுடைய திருவுளத்தால்வந்தவளோ
ஈஸ்வரனுர்தன்னிடத்தில் இருக்குங்குறத்தியரோ
பார்வதியாளம்மனுக்குப் பார்த்தகுறிசொல்பவளோ
இலட்சுமியாள்தன்றனக்கு நேர்ந்தகுறிசொல்பவளோ
ஐயன்பிரமதேவனுக்கு ஆனக்குறத்தியரோ
சரஸ்வதிநாயகிக்குச் சகுனக்குறிசொல்பவளோ
மயிலேறும்வேலவர்க்கு மனதுகுறிசொல்பவளோ
தெய்வானைவள்ளியற்குத் தேர்ந்துகுறிசொல்பவளோ
இவளழகைப்பார்ப்பதற்கு இருகண்கள்போதாது
புஸ்தகத்தைமாற்றடிக்கும் புறங்காலின்வடிவழகும்
பூஞ்சிலம்புத்தண்டைகளும் புலம்பும்நடையழகும்

முத்துச்சிப்பிதன்னிறம்போல் முழங்காலிரண்டழகும்
ஈணுதவாழை யிளவாழைத்தண்டதுபோல்
இளவாழைத்தண்டதுபோல் இருதுடையினழகும்
ஆலிலைபோலே அமைத்தவயரழகும்
கும்பிநுழையாத கும்பத்தின்மயிரழகும்
கோர்த்தமுத்திலேதளர்ந்த கொங்கையிரண்டழகும்
முருக்கம்பூயிதழ்போல் உதட்டழகும்பாவனையும்
முத்தணிந்தபல்லும் முத்தழகுமொப்பனையும்
வட்டமுகமும் முகராசிகண்ணிறமும்
வண்ணத்திருதோளும் கோர்த்தபணியழகும்
அவனிபதினறு லோகந்திரிந்துவந்தோம்
இவளழகுக்கொப்பானர் யாருமுலகிலில்லை
என்றுமிவர்கள்வந்து எடுத்துரைப்பார்குறத்தியற்கு
குறத்தியருகில்வந்து கொற்றவர்களேதுசொல்வார்
வாடிகுறத்தியெங்கள் வர்னமணிமாளிகைக்கு
கால்பிடிப்போம்கைபிடிப்போம் கனத்தபணிசெய்திடுவோ
வேண்டியுனைத்தொழுது வேணபணிசெய்திருப்போம்[ம்
ஆணாய்ப்பிறந்தவர்கள் அடப்பங்கட்டிநின்றிடுவோம்
பெண்ணாய்ப்பிறந்தவர்கள் வேணபணிசெய்திருப்போம்
ஆராங்காய் நீராடி அம்மானர்தானடி
பந்தாடிச்செண்டாடி பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் பைங்கிளிபோல்வீற்றிருப்பாய்
பளிங்குமாமண்டபத்தில் பாங்காகவீற்றிருப்பாய்
உந்தன்மேலாசைகொண்டு உழன்றுதிரிகின்றோம்
பூங்குறத்தியுன்னாலே பெண்பிள்ளைதான்மறந்தோம்
உன்னாசைகொண்டுமல்லோ சன்யாசியானேமே
தாயைமறந்தோமடி சகலரையுந்தான்மறந்தோம்
வாடிகுறத்தியென்று மையல்கொண்டார்மன்னரெல்லாம்
அப்போதுகுறத்தியவள் அக்கினிபோல்வாய்திறந்து
மன்னர்முகம்நோக்கி மலைக்குறத்தியேதுசொல்வாள்

குறம்

வாடியென்றும்போடியென்றும் வழிமறித்துஎன்னை
வம்புதும்புஞ்சொல்லவந்தீர் மன்னர்களேபோம்போம்
நாற்றெருவர்வீதியிலே வேற்றுமைதானுண்டோ
நுட்பமறியாமலென்னைச் சொற்பமென்றுமதித்தீர்

கலியாணஞ்செய்யவில்லையோ காளைகளேயுமக்கு
கன்னிக்குறத்தியின்மேல் மையல்கொண்டீர் நீங்கள்
ஒழியாத நரகமெல்லாம் மறைநூலில்சொல்லும்
அண்ணன் தம்பிதேவியர்மேலாசைகொள்வீராஞல்
ஆகாத நரகந்தன்னில் அழிந்திடுவார்மாந்தர்
குருவின் துபத்தினிமேல் ஆசைகொண்டாலல்லோ
பொல்லாத நரகமதில் கூடியழிந்திடுவார்
இப்படியாயுலகுதனி லழிந்திடுவார்கள்கோடி
இருமூடங்கொண்டவரே யிடைந்து நடப்பீர்கள்
என்றுசொல்லிப்பூங்குறத்தி மிகநோக்கிநடந்து
இடைகுலுங்கநடைகுலுங்க நடைநடந்தாள்குறத்தி

வேறு

குறத்தியவள்போனபின்பு கொற்றம்போர்மன்னவர்கள்
வாடிமனந்தளர்ந்து வண்ணமுகம்வேறுபட்டு
வார்த்தைகுழறியல்லோ மறுவேடமாஞர்கள்
முக்காடுபோட்டு முடிமன்னர்பள்ளிகொண்டார்
பெண்டுபிள்ளை தான்மறந்து பூமியின்மேல்தான்படுத்தார்
மாதுமயக்கம் பெரிதாச்சுமன்னவற்கு
குறத்திமயக்கம் பெரிதாச்சுமன்னவற்கு
கன்னிமயக்கமல்லோ தலையெடுக்கப்போகாது
அன்னமுந்தண்ணீ ரருந்தார்கள்மன்னவர்கள்
ஒருவருடன்பேசாம லுத்தமர்கள்வீற்றிருப்பார்
இப்படியாகவல்லோ யிவரிருக்கும்வேளையிலே
மாலைக்குறத்தி மலைக்குறத்திபோய் நடந்தாள்
வாராளேபூங்குறத்தி மாதர்கள்வீதியிலே
பாடிவருகின்ருள் பத்தினியாள்வீதியிலே
கைபார்த்துக்கொள்ளலியோ பச்சைப்பொட்டுகுத்தலையோ
குறியொன்றுகேட்கலியோ கொம்பனைமார்பெண்டுகளே
கூடாதபெண்களுக்குக் கூட்டிவைக்குமருந்துகொள்வீர்
சேராதபெண்களுக்குச் சேரமருந்துமுண்டு
வாழாதபெண்களுக்கு வாழமருந்துண்டுகொள்வீர்
யுத்தம்விலக்கவென்ருல் மெத்தமருந்துமுண்டு
சண்டைகெலிப்பதற்குச் சாரக்குளிகையுண்டு
எதிரிமயங்கவல்லோ இசைவானமருந்துமுண்டு
நரைத்தநல்லகூந்தலது கறுக்கமருந்துமுண்டு

தளர்ந்தஉடம்புநிமிரத் தகுந்தமருந்துமுண்டு
என்றுமவள்பாடி இளங்குறத்திவாராளே
மாநகரமாளுகின்ற மகாராசன்தேவியரும்
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்மாளிகையில்
நூற்றெருபெண்டுகளும் வேற்றுமைகளில்லாமல்
சொக்கட்டான்சூது சதுரங்கந்தானுடி
அம்மானுர்பந்து அழகுகழலாடி
ஆரங்காய்தானுடி ஆலித்துக்கொண்டாடி
பந்தாடிசெந்தாடிப் பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தி லூஞ்சலுதைத்தாடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிமார்வீற்றிருந்தார்
கொம்பனைமார்களெல்லாங் கூடிவிளையாடினுர்கள்
ஓரகத்திமார்களெல்லாம் ஒருமித்துஅங்கிருந்தார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
வீதியில்பாடியல்லோ வருங்குறத்திசேதிசொல்வோம்
பெருந்திருவாள்வீதிப் படிவாசல்காத்திருக்கும்
வாசற்படிகார்க்கும் மயிலனைமார்தாதிமார்கள்
குறத்திவருமழகைப் பார்த்தந்தகொம்பனைமார்
ஒருத்திக்கொருத்தி யுறவாகிவேதுசொல்வார்
கண்டீரோவக்கமாரே கட்டுவச்சிப்பேரழகை
பார்த்தீரோதங்கைமாரே பூங்குறத்திதன்னழகை
சாய்ந்தநடையழகுஞ் சதிரானகைவீச்சும்
ஓய்ந்தநடையழகும் உருட்டிட்டபார்வைகளும்
போர்த்தகழுத்தழகும் கொண்டையின்மேல்பூவழகும்
தகுந்தசவுளிகளும் தன்பூட்டுசங்கிலியும்
முன்கைமுதாரிகளும் மோதிரம்பொன்னுருட்டுகளும்
தங்கப்பதக்கமுந் தகதகவெனமின்னிவர
மார்பில்சரப்பளியுந் தோளில்புரண்டாட
அக்குமணிதாவடங்கள் ஆபரணஞ்சோதிமின்ன
பச்சைமணியழகும் பலகாரத்தாவடமும்
இந்தக்குறத்தியரின் இடையழகுகண்டீரோ
இந்நட்டாளல்லயிவள் இத்திசையுமல்லவென்றுர்
தெந்நாட்டுசூழலல்லோ தீவிலிருந்தாளென்றுர்
தெய்வகுறத்தியிவள் தெளிவறிந்தகட்டுவச்சி
நினைத்தகுறியுரைப்பாள் நிலமையுள்ளபூங்குறத்தி
ஆச்சியரண்மனைக்கு அழைத்துமெள்ளவாரும்

கட்டழகிமாதரெல்லாங் கைகாட்டிக்குறிகேட்பார்
என்றுசிலதாதியர்கள் எழுந்துதிருந்துள்நுழைந்து
அரண்மனையேழுகட்டும் அந்தப்புறந்தாண்டி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்முன்னேவந்து
செம்பொன்திரை நீக்கிச் சேரவந்துதெண்டனிட்டு
அம்பொன்திரை நீக்கி அழகாகத்தெண்டனிட்டு
தெண்டனிட்டுத்தாதியருஞ் சேரவெழுந்திருந்து
மோதிரமின்னவல்லோ முடிமேலேகைதொழுதார்
பேடைமயிற்கண்ணாளும் பெருந்திருவாள்தான்பார்த்து
நீ-யார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றாள்
எவர்பெண்கள்தாதி எனக்கறியக்கூறுமென்றாள்
தாதியவள்கேட்டுத் தையலர்க்கேதுசொல்வாள்
ஆர்பணியுமல்லகாண் அடியேன்திருப்பணிதான்
பெரியோருடைய பெருமாளேவுன்பணிதான்
மா நகரமாளுகிற மகாராஜாசொற்படிக்கே
உங்களதுவீதியடி காக்கிறதாதியென்றாள்
பேரால்மிகுந்ததொரு பெருந்திருவாள் தான்கேட்டு
நீயிங்கேவந்ததொரு காரணத்தைச்சொல்லுமென்றாள்
எதுக்குவந்தாய்நீ எனக்கறியக்கூறுமென்றாள்
தையலுரைகேட்டுத் தாதியருமேதுசொல்வாள்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னாச்சிநீர்கேளும் இன்னமொருவார்த்தை
காணாதவதிசயங்கள் கண்டுவந்தேன்வீதியிலே
பாராதவதிசய்ங்கள் பார்த்துவந்தேன்வீதியிலே
தேசத்தைபாளுகின்ற திரியோதிரராசன்
அவர்க்குமொருவாண்டு எனக்குமொருமூவாண்டு
வாளெடுத்துக்கைகொடுத்து வாசலிலேநில்லுமென்றார்
வாள்கொடுத்தநாள்முதலா யுன்வாசல்காத்திருந்தேன்
அன்றொருநாளின்றளவும் அணிவாசல்காத்திருந்தேன்
மண்டலத்துப்பெண்களெல்லாம் வாராதபேர்களில்லை
சீமையிலுள்ளபெண்கள் சேனபெண்கள்வந்திருப்பார்
பட்டமரசாளும் பத்தினிமார்வந்திருப்பார்
அந்தரத்துப்பெண்கள் அனேகம்பேர்வந்திருப்பார்
மேலோகம்வாழ்கின்ற மெல்லியர்கள்வந்திருப்பார்
பிச்சைக்குவந்தவர்கள் பேர்சொல்லமாளாது
இரக்கவென்றுவந்தவர்கள் எத்தனையோகோடியுண்டு

குறிசொல்லவந்வர்கள் கோடானகோடியுண்டு
இப்படிக்கொற்றதொரு குறத்தியரை நான்கண்டதில்லை
காணக்கிடையாது கன்னியிளங்கொடியாள்
பார்க்கக்கிடையாது பத்தினியாள்கட்டுவச்சி
இதுபுதுமைகண்டுமல்லோசொல்லவந்தேனுந்தனண்டை
அழைக்கத்திருவுளமோ ஆச்சிஎன்றுதெண்டனிட்டார்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
ஓரகத்திமார்களை உற்றுமவள்பார்த்து
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாளேதுசொல்வாள்
மாதுகுறத்தியரை வரவழைக்கவேண்டுமோதான்
சம்மதியுண்டானால் தங்கைமார்சொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அனைவரும்சம்மதித்து
தாதிமுகம்நோக்கி தையலர்களேதுசொல்வார்
கன்னிகுறத்தியரைக் கடுகவழையுமென்றார்
மாதுகுறத்தியரை வரவழைத்துவாருமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதாதியர்கள்
எட்டடியுமோரடியாய் விட்டுமிகநடந்து
பத்தடியுமோரடியாய்ப் பதறிவழிநடந்து
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தார்வீதியிலே
கட்டுவச்சிமுன்னேவந்து கன்னியருமேதுசொல்வாள்
குறத்தியெதிரில்வந்து கொம்பனையாளேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மாளிகைவாசலுக்கு
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்தேவிகட்கும்
பார்த்துக்குறியுரைத்தால் பாக்கியங்கள்தந்திடுவார்
கண்டுகுறியுரைத்தால் கனகபணிதான்கொடுப்பார்
வருகிறையோகட்டுவச்சி மாளிகைக்கென்றழைத்தார்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தமலைக்குறத்தி
நல்லதென்றுசம்மதித்து நடந்தாளேகட்டுவச்சி
அடிசிலம்புபாடகமும் அசையவழிநடந்தாள்
தண்டைச்சிலம்பசையத் தானடந்தாள்கட்டுவச்சி
ஆடையொதுக்கியவள் அசைந்துவழிநடந்தாள்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புறந்தாண்டி
மண்டபத்தின்வழியாக வந்திருந்தாள்பூங்குறத்தி
தாமக்கருங்குழலாள் தாதியரைத்தானழைத்து
குறத்தியவள்வீற்றிருக்கக் குறிஞ்சுமணைபோடுமென்றாள்
மலைக்குறத்திவீற்றிருக்க வட்டமணைபோடுமென்றாள்

அந்தவுரைகேட்டு அழகான தாதியர்கள்
ஏலக்கருங்குழல்மார் இட்டார்கள்மீந்தடுக்கு
கோலவன்னக்கட்டுவச்சி குந்துங்காணென்றுரைத்தார்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
பச்சைமணிபாலமணி இச்சையுண்டாவுமக்கு
படைமுற்றுஞ்சண்டைவெல்ல வசியமுண்டுகொள்வீர்
இந்நாட்டுக்குறத்தியைப்போ லிச்சைசொல்லமாட்டேன்
என்னுலும்மையவட்குங் கைபார்க்குங்குறத்தி
உண்மையுள்ளகுறியுரைத்து உச்சிதங்கள்பெற்று
வண்மையுள்ளயெந்தனிட மனையிடத்திற்சேர்வேன்
ஈரேழுநாளாச்சுதடி தென்மதுரைவந்து
இளங்கொடியாளல்லியற்கு இசைந்துகுறிசொன்னேன்
ஐந்தொருநாளாச்சுதம்மா துவாரகைக்குவந்து
அலமேலுமங்கையற்கு ஆனகுறிசொன்னேன்
பத்தொருநாளாச்சுதடி அத்திபுரம்வந்து
பாவையரேயுந்தனுக்குக் கைபார்ப்பேன்நீவா
கைக்குழந்தைபசியாலே கதறுதடியம்மே
கடுகெனவேமனைபுகுந்து அன்னமளித்திடுவாய்
அரிபிளவும்வெற்றிலையும் அள்ளியிடுவாயே
அதற்கேற்றபிரமனுட பத்திரியுந்தாராய்

வேறு

அந்தவுரைகேட்டு அந்தப்பெருந்திருவாள்
தாமக்கருங்குழலாள் தாதியரைத்தானழைத்தாள்
இன்றுமுறையெந்தனது எழுந்திருந்துமுன்னேவந்தாள்
அழைத்தபணிசொல்லுமென்று யருங்கிளிதெண்டனிட
என்னபணிசொல்லுமென் றிளங்கொடிஏதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாளேதுசொல்வாள்
ஆனகுறத்தியற்கு அன்னம்படையுமென்றாள்
அந்தவுரைகேட்டு அலங்காரத்தாதியர்கள்
கைகாலுஞ்சுத்திபண்ணிக் கனிவாயுங்கொப்பளித்து
ஆக்குமடப்பளியை அலகிட்டுத்தான்திறந்து
கோட்டைமடப்பளியைக் குச்சிட்டுத்தான்திறந்து
முற்றத்திலேபோட்டு முத்துபோல்சாதமிட்டு
சுற்றிக்கறியைவைத்துப் புத்துருக்குநெய்வார்த்தாள்
குத்துபருப்புமிட்டு கூசாமல்நெய்வார்த்தாள்

கட்டுவச்சிமுன்னேவந்து கருங்குழலாள்சொல்லுகிருள்
மாலைக்குறத்தியரே மலைக்குறத்திவாருமென்று
கட்டுவச்சிநாயகிக்கு கைக்குசலந்தான்கொடுத்து
உன்பாலனுக்கன்னம் படையுமென்னதாதியரும்
அப்போதுகட்டுவச்சி ஆணழகியேதுசொல்வாள்
அன்னமதுவாங்கி ஆரணங்குகட்டுவச்சி
மைந்தனுக்கன்னமிட்டு வளநாடிவந்திருக்க
குழந்தைக்கன்னமிட்டு கிளிமொழிவந்திருக்க
கூடையொருபக்கம்வைத்து குந்திஞள்பூங்குறத்தி
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாளேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கூறுவாளிராசகன்னி
நீயிருக்கிறநாடு எழிலானதேசமும்
மயிலணையேயுன்னுடைய மைந்தர்பெருமைகளும்
மைந்தர்பெருமையு மற்றபேர்சந்தடியும்
ஒன்றுமொளியாமல் உத்தமியேகூறுமென்ருள்
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குயேதுசொல்வாள்

குறம்

தெந்நாடும்மலைநாடு இருக்குமந்தநாடு
தேசமடிகைலயங்கிரி இருக்குமெங்கள்நாடு
கல்லடைந்தமலைநாடு நாடுமந்தநாடு
கைலயங்கிரிநாதரங்கே காட்சிதரும்நாடு
சொல்லறியமலைநாடு சுகம்பெருகும்நாடு
சோணுசலயீசருட தேசமடிநாங்கள்
எத்திசையும்புகழ்படைத்து இருக்குமந்தநாடு
எழிலானமலைநாட்டு குறத்தியடிநாங்கள்
குறத்திமெத்தக்குனிந்தநாடும் குஞ்சரவநாட்டில்
கூசாமல்வாழுமந்த தேசமடிநாங்கள்
வறுத்தமுத்துச்செந்நெல்களும் முளைக்குமந்தநாடு
வாழருணகிரிநாடு தேசமடிநாங்கள்
முத்துமலைரத்தினமலை எங்களதுநாடு
மூவர்தமிழ்பாடுமலை எங்களதுநாடு
நீலமலைநிமலமலை எங்களதுநாடு
நித்தம்நித்தம்குறம்பாடி திரிவமடிநாங்கள்
பச்சைமலைபவளமலை எங்களதுநாடு
பரமசிவன்காளியுடன் வாதாடும்நாடு

கொச்சிமலைகுடகுமலை எங்களது நாடு
குமரேசர்வள்ளியரை கைபிடித்தநாடு
குறத்திநல்லகுச்சிறிக்கி கனதனவொய்யாரி
குமரேசர்வந்தனராய்க் குறியுரைக்குங்குறத்தி
வெள்ளெருக்கம்பூச்சூட்டி முடிந்தவண்ணுமலையில்
வேணவரங்கொடுப்பதற்கு குறியுரைக்குங்குறத்தி
உருக்கியுபொன்கொடுத்தாலும் ஒன்றுமில்லையென்போம்
உண்ணுமுலையம்மனுக்கு உகந்தமுதுபடைப்போம்
வெள்ளிமலைரத்தினமலை எங்களது நாடு
விக்கினற்கும்வேலவற்கும் குறியுரைக்குங்குறத்தி
கண்டத்திலேகறுப்புடைய கைலையங்கிரிநாதர்
கர்த்தருடதயவாலே குறியுரைக்கவந்தேன்
சால்மடித்துபூங்குறத்தி கைகூடைமுன்னேவைத்து
ஒருகால்மடித்துமவள் ஒருகால்பிறகணைத்து
பிரப்பங்கோல்கைபிடித்து பெருந்திருவாட்கேதுசொல்வாள்

குறம்

நன்மையுண்டுயுன்மனைக்கு நான்வருதலாலே
நாடாளும்ராசருக்கு பத்தினியேகேளும்
தலைக்குயரம்கெவுளிநின்று சொன்னதினலம்மே
தனக்குவரும்செல்வங்களில் சொல்லமுடியாது
மார்தனக்குநேராக மனைக்கெவுளிசொன்னல்
மலைராமர்அருளாலே சந்தோஷமுண்டாம்
பெண்டுகளனவற்கு இடதுபக்கந்துடித்தால்
பூமியரசாள்வதற்குப் பிள்ளைபெறுவார்கள்
மற்றுமுள்ளவலதுபக்கம் மங்கையற்குதுடித்தால்
மாறுமல்பேரிடிகள் விளைந்துமல்லோவருமே
ஆணுய்ப்பிறந்தவர்க்கு வலதுபக்கந்துடித்தால்
அன்றெட்டாநாளியிலே அரசுநிலையாள்வார்
கனத்ததொருயிடதுபக்கம் காளையற்குதுடித்தால்
காசினியில்வாழாமல் கைலாசஞ்சேர்வார்
இப்படியாயுலகதனில் சொல்லுகிறுர்பெரியோர்
எனையழைத்தகாரியங்கள் உரையுமென்றுள்குறத்தி

வேறு

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுசொல்வாள்

எந்தநாடுங்களுக்கு இருப்பிடத்தைச்சொல்லுமென்ருள்
வாய்திறந்துகட்டுவச்சி மயிலணையாளேதுசொல்வாள்

குறம்

எந்தனது நாடுதனை கேட்கவந்தாயம்மே
இருப்பிடத்தைசொல்லுகிறேன் விருப்பமுடன்கேளும்
ஆதியென்றகைலாச நாதரருளாலே
ஐங்கரனூர் தன்னருளா லம்மையருளாலே
இந்தநாடெங்களது தென்னாடுஅம்மே
இந்திரருஞ்சூரியரும் இருக்குமெங்கள் நாடு
சூரியரும்சந்திரரும் சூழ்ந்திருக்கும் நாடு
சுத்தமுள்ளபெரியோர்கள் தவம்புரியும் நாடு
அந்தணர்கள்வேதியரும் அழகானமுனிவர்
அனைவோரும்சதாகாலம் தவம்புரியும் நாடு
மந்திரங்கள்சாஸ்திரங்கள் மறையோதும் நாடு
மறவாமல்உமையவளும் துதிக்குமெங்கள் நாடு
சதுர்முகனுரெங்களுக்கு குருபீடமம்மே
காளியம்மையாடுவதும் எங்களது நாடு
ஆயரவரெந்தனிட வுடன்பிறந்ததமையன்
அவருடையதுவாரகைதான் எந்தனது நாடு
இந்திரனுரெந்தனுக்கு இசைந்தவம்மானம்மே
அப்போதுதெய்வபதி நாங்களரசாள்வோம்
மேகவர்னனெந்தனுக்கு சிறுதகப்பனம்மே
மெய்யானஅவர்பதியை நாங்களரசாள்வோம்
நாகராசன்னெென்தகப்பன் நாயகமேகேளும்
நாகலோகமெல்லாம் அரசாள்வோம்நாங்கள்
அந்தணனுராளுகின்ற பூமியெல்லாமுழுதும்
அடங்கலுநாமரசாள்வோம் ஒருவரெதிருண்டோ
தென்மதுரைசொக்கலிங்கம் என்தகப்பனம்மே
தேவருடமணிபுரத்தை நாங்களரசாள்வோம்
ஈரேழுபதினாலு லோகமெல்லாம்நாங்கள்
எப்போதுமரசாள்வோ மிணையொருவரில்லை
தப்பாமலெங்களது சீமைதனிலம்மே
தளராதுவொருநாளும் பஞ்சங்களுமில்லை
அக்ஷயத்தாயிரம்பேர்க் கன்னங்களுமிடுவோம்
ஆதிகயிலாசசிவ சங்கரனுரருளால்

மந்திரத்தினல்மாங்காய் பழுப்போமடி நாங்கள்
மாமுனிவர் தன்னருளால் மாயவனர்செயலால்
தந்திரத்தினல்மாங்காய் இற்றுவிழச்செய்வோம்
தென்னிலங்கைராமர் தன்னருளாலம்மே
பச்சைமலைகீழிருந்து பழங்கள்மிகப்பறிப்போம்
பசிகாலமானலே பட்டணத்தில்திரிவோம்
கொச்சிமலைகுடியிருந்து கோவைப்பழம்பறிப்போம்
குளிர்காலமானலே குறியுரைக்கவருவோம்
அக்குமணிகொக்குமணி கொள்வையடியம்மே
ஆண்மைவரப்புருடனுக்கு மருந்துகொள்வீரே

வேறு

தேனூர்விராடமம்மா தினமுஞ்செந்நெல்விளையும்
கல்லின்மேல்நெல்விலையும் கதிர்வாங்கிமேலோங்கும்
கட்டுக்கலங்காணும் கதிருழக்குநெற்காணும்
வாழைவடக்கீணும் வன்கமுகுதெற்கீணும்
சோலைவடக்கீணுந் துய்யபலாமேற்கீணும்
கோவும்புலியுமொரு குளத்திலேநீர்குடிக்கும்
கீரியும்சற்பமொரு கிண்ணியிலேபால்குடிக்கும்
எலியும்பூனையுமொரு பஞ்சரத்தில்வாழ்ந்திருக்கும்
தங்கமழைசொரிந்து தழைத்திருக்குமெங்கள் நாடு
மாதமும்மாரி மழைகள்பொழிந்துவரும்
திங்கள்மும்மாரிபொய்யுந் தேசஞ்செழித்திருக்கும்
என்றுமவளுரைத்து யிருந்தாளொருபுறமாய்

பெருந்திருவாள் சொல்வது

வேறு

அப்போபெருந்திருவா ளருங்கிளியாளேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கொம்பனையுங்கூறலுற்றாள்
உந்தனதுசீமையெல்லா முரைத்தாயேகட்டுவச்சி
நீ-எந்தவூரெந்ததேசம் எனக்கறியக்கூறுமென்றார்
அப்போமலைக்குறத்தி ஆரணங்குசொல்லலுற்றாள்
உந்தனதுநற்குலமும் உன்பேருஞ்சொல்லுமென்றாள்

குறம்-வேறு

எங்கள்குலம்ராசகுலம் குறக்கூட்டந்தானுமல்ல
எழிலார்குடிசையிலே குடியிருப்போமம்மா

ஐவருக்கும்பெண்டிருப்போம் நாங்களடியம்மே
அபிமானங்குலையாத ஜாதியடி நாங்கள்
பஞ்சவர்க்குப்பெண்டிருப்போம் நாங்களடியம்மே
பக்ஷாதாபங்குலையாத ஜாதியடி நாங்கள்
பெண்டிருந்ததேசமெல்லாம் பிள்ளையொன்றுமறியோம்
பெருநெருப்பைத்தீண்டொணாத ஜாதியடி நாங்கள்
மாலையிட்ட நாள்முதலாய் மனதறிந்தாரில்லை
மடிநெருப்பைத்தீண்டொணாத ஜாதியடி நாங்கள்
கூரையிட்ட நாள்முதலாய் குணமறிந்ததில்லை
கொடிநெருப்பைத்தீண்டொணாத ஜாதியடி நாங்கள்

## வேறு

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள் நாயகியும்
குறத்தியுரைகேட்டுக் கொம்பனையாளேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி வர்னமலைக்கட்டுவச்சி
மாலையிட்ட நாள்முதலாய் மனதறிந்ததில்லையென்றாய்
கூரையிட்ட நாள்முதலாய் குணமறிந்ததில்லையென்றாய்
கையிற்குழந்தையது வந்தவயணமென்ன
மடியிற்குழந்தையது வந்தவாறுசொல்லுமென்றாள்
அப்போமலைக்குறத்தி அருங்கிளியாளேதுசொல்வாள்

## குறம்

ஆயனருளாளன் அண்ணனடியம்மே
அரிவையந்தசீதையரும் நாத்தியடியம்மே
உலகளந்தமாலெங்கள் அண்ணனடியம்மே
உத்தமியாள்சீதையெங்கள் நாத்தியடியம்மே
உலகாளும்ராஜகன்னி எனக்குச்சக்காளத்தி
அவளைப்பெற்றசொக்கரெங்கள் தகப்பனடியம்மே
மாயவனேமைந்தன்வரம் வேண்டுமென்றுகேட்டால்
மகிழ்ந்துமெங்கள்ராமரல்லோ மைந்தன்வரம்தருவார்
மாயவரைமனந்தனிலே தினம்நினைப்போம்நாங்கள்
மாயவரேகுழந்தையாக மடிமீதிலிருப்பார்
பிள்ளையில்லாதெங்களுக்கு பிள்ளைவரம்தருவார்
மைந்தன்கலிதீர்க்கவந்த மாயனிவர்தாண்டி
மந்திரத்தாலேந்துபிள்ளை வுண்டோடியெனக்கு
மகாதேவர்தந்தபிள்ளை யிரண்டடியம்மே

வேறு

குறத்தியுரைகேட்டு கொம்பனையாளேதுசொல்வாள்
இந்த-மாதுவுரைகேட்டு மயிலனையாளேதுசொல்வாள்
மைந்தன்பெறும்வகை மயிலனையேசொல்லிவிட்டாய்
குழந்தைபெறும்வகை கொம்பனையேசொல்லிவிட்டாய்
எந்தெந்தலோகமெல்லாம் கண்டுவந்தாய்கட்டுவச்சி
பார்த்துவந்தலோகமெல்லாம் பகரடிபூங்குறத்தி
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி [றேன்கேள்
பார்த்துவந்தலோகமெல்லாம் பைங்கொடியேசொல்லு

குறம்-வேறு

பூலோகபுவர்லோகம் பார்த்துவந்தேனம்மே
மேலானதெய்வலோகம் பார்த்துவந்தேனம்மே
மேன்மையுள்ளவைகுந்தம் கண்டுவந்தேனம்மே
சீரானசந்திரலோகம் பார்த்துவந்தேனம்மே
செகம்புகழும்சூர்யலோகம் பார்த்துவந்தேனம்மே
மாலோகஞ்செனலோகம் பார்த்துவந்தேனம்மே
வரிசையுள்ளபிரமலோகங் கண்டுவந்தேனம்மே
நேரானதராதலங்கள் பார்த்துவந்தேனம்மே
நிச்சயமாய்குறிசொல்லும் குறத்தியடிநானும்

வேறு

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுசொல்வாள்[ளுய்
பதினாறுலோகமெல்லாம் பார்த்துவந்தேனென்றுசொன்
அந்தந்தலோகமெல்லா மறிந்துவந்தேனெனசொனனுய்
கண்டுவந்தலோகத்திலே கனத்தகுறிசொன்னதுவும்
நீ-சொன்னகுறிக்குமெச்சி உச்சிதங்கள்தந்தவும்
வாங்கிவந்தபூஷணங்கள் மயிலனையேசொல்லுமென்றாள்
அப்போதுகட்டுவச்சி அழகாகவேதுசொல்வாள்

குறம்-வேறு

ஈசுரனார்பெற்றெடுத்த விக்கினராமவர்க்கு
வயிறுகிழிந்துமுகம்வேறு ஆகுதென்றுசொன்னேன்
இந்திரற்கும்வானவர்க்கும் மயிலவர்க்குமல்லோ
இசைவாகநானுரைத்த குறிகள்மெத்தவுண்டு

ஈசுரர்க்கும்பிரமகத்தி யிருக்குதென்றுசொன்னேன்
இன்னமொருபெண்டுகைக்கு வருவானென்றுசொன்னேன்
என்குறிக்குமீசுரனுர் மெச்சியல்லோ அம்மே
இயலானமுத்துமாலை யீய்ந்தாரடியம்மே
விக்கினரும்வேலவரும் எந்தனுக்குஅம்மே
வைடூரியக்குறக்கூடை தந்தாரடிய்ம்மே
இந்திரரும்வானவரும் மெச்சியல்லோ அம்மே
கல்லிழைத்தகணையாழி தந்தாரடியம்மே
விஷ்ணுவுக்குமிலட்சுமிக்கும் வேணகுறிசொன்னேன்
விதமாகஎன்னையவர் மெச்சிக்கொண்டுஅழைத்து
பட்சமுடனெந்தனுக்கு இலட்சுமியாள்தானும்
பாங்கானமார்பதக்கம் தந்தாரடியம்மே

வேறு

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்தியுரைகேட்டு கொம்பனையாளேதுசொல்வாள்
குறம்பாடிபெற்றுவந்தால் கோடானரத்தினங்கள்
உள்ளக்குறியுரைத்து வுச்சிதங்கள்பெற்றுவந்தாய்
பூங்குறத்தியெந்தனுக்கு புகழ்ந்தகுறிசொன்னையானல்
உள்ளக்குறியுரைத்தால் ரத்தினங்கள்தாரனடி
நல்லகுறியுரைத்தால் ரத்தினங்கள்தாரனடி
கொம்பனையேயெந்தனுக்கு குறியுரைத்தபிற்பாடு
குறக்கூடைதானிறைய கொட்டுகிறேன்ரத்தினங்கள்
ஒன்பதுரத்தினங்கள் வுத்தமியேதந்திடுவேன்
வச்சிரவைடூரியம் மாணிக்கந்தந்திடுவேன்
நீலபதக்கங்களும் நிறைந்தமுத்துதாழ்வடமும்
பச்சைபதக்கங்களும் பருத்தமுத்துதாழ்வடமும்
தாளிபதக்கங்களும் சன்னல்பின்னல்தாழ்வடமும்
அத்தனையும்நான்தருவேன் ஆனகுறிசொல்லுமென்ருள்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மாதுமுகம்நோக்கி மலைக்குறத்தியேதுசொல்வாள் [டேன்
தாளிபதக்கம்வேண்டேன் சன்னல்பின்னல் நான்வேண்[ன்
பச்சைபதக்கம்வேண்டேன் பருத்தமுத்து நான்வேண்டே
மாணிக்கம்வேண்டேன் மரகதண்டி நான்வேண்டேன்
உத்தமியேயுன்தயவால் மெத்தவுண்டுஎந்தனுக்கு
பேர்பெற்றஎங்கள்பெருமாள்தயவாலே

வெள்ளிமலைமேலே வேணதுண்டுளங்களுக்கு
உன்கையில்தானிருக்கும் கற்பூரசம்பாவும்
செந்நெல்கொடுத்தையானால் சீராகளந்தனுக்கு
அள்ளிகொடுத்தையானால் ஆனந்தவாழ்மார்பி
செந்நெலதுகொடுத்தால் நல்லகுறியுரைப்பேன்
குறக்கூடைநெல்கொடுத்தால் குறியுரைப்பேனுந்தனுக்கு
மெல்லியவள்சொற்கேட்டு நல்லதென்றுசம்மதித்தாள்
அழகுசம்பா நான்தருவேனுனகுறிசொல்லுமென்றாள்
நெல்லளந்து நான்தருவேன் நல்லகுறிசொல்லுமென்றாள்
அப்போதுகட்டுவச்சி அதற்குமேசம்மதித்து
கொம்பனையாள்மாதருக்கு குறிசொல்லப்போனாள்காண்

## குறம்

சாணியதுதானெடுத்து சதிருடனேமெழுகி
சட்டமுடன்பிள்ளையாரை பிடித்துமங்கேவைத்தாள்
அருகுதும்பைகொன்றையது அவர்சிரசில்சாற்றி
அழகானகனிவகைகள் கொண்டுவந்துவைத்து
கிழங்குடன்வாழைப்பழம் தேங்காயுமுடைத்து
கிண்ணியிலேபாலமுர்தங் கொண்டுவந்துபடைத்தார்
பச்சரிசிதேங்காயும் பயறுடனேபாலும்
இச்சையுடன்தான்படைத்து தூபதீபங்கொடுத்தாள்
அருகுதும்பைகையிலெடுத்து அவர்சிரசில்சாற்றி
சுற்றிவந்துகைதொழுது தெண்டனிடுமென்றாள்
சிந்தையிலேஉன்குறைகள் நீநினைந்து அம்மே
இந்தநல்லகணபதியை வந்துபணியென்றாள்
உங்கள்குலதெய்வங்களை வுகந்துநன்றாய்போற்றும்
உன்வீடுபூவாடைக் காரிகளை நினைத்து
சிந்தையிலேதியானம்பண்ணி வந்தமருமம்மே
திறமாகவுந்தனுக்குக் குறியுரைப்பேனிப்போ
எந்தன்குலதெய்வங்களை நானினைத்து அம்மே
இகழாமலுந்தனுக்குக் குறியுரைப்பேனிப்போ
கெங்காபவானியம்மாள் காளிகாதேவி
அங்காளஅம்மன்சத்தி அனைவோரும்வாங்கள்
ஆகாசவாணிதுர்க்கை ஐயனார்பிடாரி
அலைகடலில்வாழுகின்ற கன்னிகளும்வாங்கள்
கைலாசவாசருமே கைலைமலைநாதர்

காஞ்சியில்வாழ்ஏகாம்பர காமாட்சிவாங்கள்
அண்ணுமலே நாதருமே வுண்ணுமுலேத்தாயே
கொள்ளாபுரியாளும்வந்து குறக்கூடையமரும்
ஏழுருகன்னிகளும் எல்லேப்பிடாரிகளும்
எல்லவரும்வந்துமிந்த கூடைதனிலமரும்
ஈசரும்பார்வதியும் இருவருமாய் நீங்கள்
துன்பமுள்ளகுறக்கூடை வந்தமரவேணும்
அச்சுதரும்இலட்சுமியும் ஆனந்தமாக
பட்சமுள்ளகுறக்கூடை தன்னில்வந்தி அமரும்
பிரம்மாவும்சரஸ்வதியும் புகழாக நீங்கள்
பெருமையுடன்குறக்கூடை வந்தமரவேணும்
தேவேந்திரரிந்திராணி சித்தர்கின்னரர்களும்
தெளிவானகுறக்கூடை தன்னில்வந்து அமரும்
எங்கள்வள்ளிதெய்வானேயம்மை யிருவர்களுமொன்ருய்
வேலவரும்வந்துகுறக் கூடைதன்னிலமரும்
ஏழுமுனியிளேயமுனி மன்னுரசாமி
இவர்களெல்லாமொன்ருக குறக்கூடைதனிலமரும்
பச்சைமலேத்தாயாரும் பெரியபாளேயத்தாளும்
பாவாடைராயனுமே வந்துமிகவமரும்
முப்பத்துமுக்கோடி தேவர்களுங்கூட
அனேவோரும்வந்துமிந்த கூடைதனிலமரும்
அண்டரண்டதெய்வங்களே நினேத்துமந்தக்குறத்தி
அழகுபெருந்திருவாட்குயேதுகுறிசொல்வாள்
முந்திமுந்திவிநாயகனே தொழுவமடி நாங்கள்
முருகருடபாதமலர் என்னுளுமறவோம்
சத்திவிநாயகனேத் தொழுவமடிநாங்கள்
சரஸ்வதியை அனுதினமும் சிந்தையினில்மறவோம்
ஆதிசிவன்மாயவரைப் பிரம்மாவைத்தொழுவோம்
ஆகாசதேவருடன் இந்திரரைமறவோம்

வேறு

அப்போதுமலேக்குறத்தி ஆரணங்கேதுசொல்வாள்
தேவாதிதேவர்களே நினேத்துமேஅப்பொழுது
கொல்லாபுரத்தாளே நினேத்துகுறிசொல்லுகிறேன்
குறிசொல்வேன்வாடியம்மா யென்ருளேபூங்குறத்தி
அப்போதுபெருந்திருவாள் ஆரணங்குயேதுசொல்வாள்

அப்படிக்கே நல்லதென் றூரணங்குவந்தமர்ந்தாள்
குறக்கூடை முன்பாகக் குந்தினள் நாயகமும்
மலைக்குறத்திகட்டுவச்சி வகையாகயேது சொல்வாள்

குறம்

முறம் நிறம்பசென்னல்கொண்டு மூன்றுகப்பகுந்து
உன்மனதில்கேட்டதெல்லாம் சொல்லுகிறேன் கேளும்
உன்பேருபெருந்திருவாள் உடன்பிறந்தாள் சுபத்திரை
உன்கணவன் திரியோதிரன் உள்ளபடிதாண்டி
இலக்குணர்க்குப்பூநூல் கலியாணமென்றுசொல்லி
ஐவரையும்அழைத்துவந்த துண்டோடிதா நீங்கள்
அவர்கள்வரும்வழிதனிலே வசிகளை நாட்டி
ஐவரையுங்கொல்லவென்று எண்ணியிருந்தீர்கள்
ஆதியென்றகோபால கிருஷ்ணருடதயவால்
அதிக்குந்தப்பிப்பிழைத்தார்களவர்களுமம்மே
மல்லர்களைவிட்டுமல்லோ எண்ணைகளைத்தேய்த்து
மாளாதபஞ்சவரைக் கொல்லவென்று நினைத்தீர்
ஏழுலகமாண்டதொரு எம்பெருமாள்தயவால்
எம்பெருமாளருளாலே ஐவர்களும்பிழைத்தார்
குளிக்குமந்தக்குளந்தன்னில் கூர்வசியை நாட்டி
கூசாமல்பாண்டவரைக் கொல்லத்துணிந்தீர்கள்
அன்றுமந்தபோதனிலே நஞ்சுமதைக்கலந்து
உயிருள்ளபாண்டவரைக் கொல்லத்துணிந்தீர்கள்
அப்போதுவீமராசன் அவர்களுண்ணும்சோற்றை
அனைவருக்குமாகாதென்று தான்வாரிப்புசித்தார்
வாரியுண்டசோற்றாலே மதிமயக்கமாகி
மன்னவர்மெய்மறந்து வைகுந்தம்சேர்ந்தார்
அப்போது நால்வருமே அலண்டுபுரண்டழுது
ஆயனந்தமாயவரை மிகநோக்கித்தொழுதார்
அப்போதுமாயவரும் ஐவர்களைக்காக்க
அத்திபுரமமர்ந்தாரடி ஜோதிவடிவாக
விஷக்கடிபாம்புக்கடி தீருதற்குமருந்து
வேணவிதமருந்தெடுத்துக் கூறிவந்தார்தெருவில்
கூறிசம்பவித்தசத்தத்தைத் தருமராவறிந்து
கொப்பெனவேதம்பிதனை அழையுமென்றுசொன்னார்
அப்போதுதம்பியவன் தானழைத்துவந்தான்

எனழைத்தீரென்றுசொல்லி ஜோகியவன்கேட்க
தம்பிதனையெழுப்புமென்று தருமர்சொன்னாரப்போ
எழுப்பிவிட்டாலெந்தனுக்கு கொடுப்பதென்னவென்றார்
எந்தனது ஆஸ்திகளை உந்தனுக்குத்தருவேன்
அப்போதுஜோகியவன் மருந்தெடுத்துவுறைத்து
ஆயருட அருளாலே பிழைக்கவென்றுகொடுத்தான்
வைகுந்தம்போனவுயிர் வந்துவீமர்தழைக்க
மந்திரங்கள் தந்திரங்கள் செய்தாண்டியம்மே
அவன்செய்தமந்திரத்தால் பிழைத்தாண்டிபீமன் [பீமன்
அலண்டுநித்திரைபோனவன்போல் புரண்டெழுந்தான்
செத்திருந்தபீமனுமே பிழைத்தெழுந்தான்பீமன்
திகிலெடுத்துமனங்கலங்கி திரியோதிரனழுதான்
மற்றுமொருவிதத்தாலே பஞ்சவரைக்கொல்ல
மனமகிழ்ந்துசகுனியுடன் ஆலோசனைசெய்து
படுக்கின்றபாய்தனிலே பாம்புகளைவிட்டு
பதைபதைக்கப்பாண்டவரைக் கொல்லத்துணிந்தீர்கள்
அதற்குந்தப்பிப்பிழைத்தார்கள் பாண்டவர்களம்மே
ஆயனார்மாயனிட உபாயமடியம்மே
வஞ்சனையாய்ச்சூதாடிப் பாண்டவரையப்போ
மாளாதவிலங்குகளை மாட்டவைத்தாரம்மே
பஞ்சவரைவஞ்சனைகள் செய்ததுபோதாமல்
பாஞ்சாலிதுரோபதையைப் பற்றியிழுத்தார்கள்
ஐவருக்குமுகந்ததொரு அபிஷேகபத்தினி
ஆரணங்குதுரோபதையைச் சபைதனிலேயிழுத்தார்
பற்றியிவர்தாணிழுத்து பாவைதுகிலுரிந்து
பண்ணுதபங்கமெல்லாம் பண்ணிவைத்தார்சபையில்
கட்டழகிதுரோபதையாள் மனங்கலங்கியப்போ
கர்த்தரவர்மாயவரைக் கைதொழுது நின்றாள்
ஆயரவர்மாயவனார் அறிந்தார்யிவள்துயரம்
அட்சயமாய்துயில்மாள ஆயரவர்வரமளித்தார்
பத்தினியாள்துரோபதைக்கு மாளாத்துகில்கள்
வளருதென்றுசபைதனிலே மெச்சிநின்றார்பெரியோர்
இப்படியாய்வஞ்சனைகள் செய்ததுண்டோஅம்மே
இன்னங்கொஞ்சமுண்டடிதான் சொல்லுகிறேன்கேளும்
அவருடையபங்குகளை அடங்கலுமேபரித்து
அரண்மனைமண்டபமு மிடிக்கஞாயமுண்டோ

அவருடையதேவிதன்னை அம்பலத்தில்நிறுத்தி
அவளைமிகவாய்பழுது சொன்னாரடியம்மே
உத்தமியைக்கொண்டுவந்து உங்கள்சபையில்நிறுத்தி
உரியாததுகிலுரிந்த துண்டடிதா நீங்கள்
பத்தினியைக்கொண்டுவந்து மகாசபையில்நிறுத்தி
பாங்கழியப்பேசினது உன்புருஷனல்லோ
மாதுதனைக்கொண்டுவந்து மகாசபையில்நிறுத்தி
மனமழியப்பேசினது முண்டடிதா நீங்கள்
அப்பொழுதுதுரோபதையாள் தன்மனதிலெண்ணி
அண்டாதசண்டாள ரென்றுமிகநொந்து
திரியோதிரன்முகம்பார்த்து தேவியவள்சொல்வாள்
தீராதபெருஞ்சபதம் இட்டாளந்தசபையில்
மொய்குழலாள்துரோபதையும் மூன்றிரண்டுபேரும்
முடிமன்னர்சபைதனிலே இட்டார்பெருஞ்சபதம்
இட்டபெருஞ்சபதத்தினால் திரியோதிரனொந்து
தன்மனதில்தானடுங்கி தகமையெடுத்துரைப்பான்
பனிரண்டுவருஷமட்டும் வனவாசந்திரிந்து
பதிமூன்றுவருஷமதில் மறைவாகவிருந்து
பதிமூன்றுஞ்சென்றவுடன் பதினாலில்வந்து
பாரதத்தைத்தான்முடித்து பட்டமாளுமென்றான்
இத்தனைவஞ்சனைகள் செய்ததுண்டுநீங்கள்
அத்தனையும்பொறுத்துஐவர் போனார்வனவாசம்

வேறு

நீங்களிந்தஞாயமெல்லாம் செய்ததுண்டோவென்றுரைத் [தாள்
அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்திவுரைகேட்டு கொம்பனையாளேதுசொல்வாள்
வஞ்சனைகள்செய்ததுண்டு மாயங்கள்மெத்தவுண்டு
பண்ணுதகோலமெல்லாம் பண்ணிவைத்தாரைவரையும்
வஞ்சனைகள்செய்ததுண்டு வனவாசம்போனதுண்டு
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவருவார்களோ
பதிமூன்றுஞ்சென்றபின்பு பதினாலில்பஞ்சவர்கள்
பாரதமென்று படையெடுத்துவருவாரோ
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவருவார்களோ
வருவாரோவாராரோ மற்றொன்றுஞ்சொல்லடிநீ
என்புருஷன்தானே இவர்நாட்டையாள்வாரோ

பாரதம்வென்று படைபோகும்வேளையிலே
நாங்கள்கெலிப்பதுவும் நாடுநகராளுவதும்
அவர்கள்கெலிப்பதுவும் ஆராய்ந்துசொல்லுமென்ருள்
அப்போமலைக்குறத்தி அரிவையருமேதுசொல்வாள்
நத்திவந்ததெய்வமோதான் உற்றகுறியுரைக்க
பஞ்சவர்கள்தன்மனதைப் பார்த்துமிருந்தேனே
கட்டழகர்தன்மனதைக் கண்டுமிருந்தேனே
சாதகம்பொய்யாது தலைவிதியுந்தப்பாது
பிர்மனெழுத்துதான் பிரளாதுஒருநாளும்
கர்த்தரிடகட்டளைகள் கடவாதொருநாளும்
கொல்லாபுரத்தாளை எண்ணியேயிப்போது
சூதுநடத்தையெல்லாஞ் சொல்லுகிறேன்கேளடிநீ

குறம்

கூடைதனிலமர்ந்திருக்கும் கொல்லாபுரத்தாளே
கொம்பனையாள்கேட்குங்குறி சொல்லவரமருளும்
இன்னமிவள்கேட்குங்குறி எல்லாம்நான்சொல்ல
எந்தனுக்குவாக்கருளும் என்றுமிகத்தொழுது
பெருந்திருவாள்முகம்நோக்கிப் போனதொருகுறத்தி
பெருமையுள்ளஐவரது சேதிகளைச்சொல்வாள்
தர்மமேஜெயமென்று போனர்வனவாசம்
தருமங்கள்நினைப்பவர்க்குத் தாழ்ச்சியுண்டோசொல்லும்
ஐவர்களும்ஐந்துருவம் கொண்டுமல்லோவம்மே
அன்பானவிராடபுரஞ் சேர்ந்தாரடியம்மே
இன்னமுந்தன்கணவன்படை சேனைகளைக்கூட்டி
இயலானயுத்தங்கள் நடக்குமடியம்மே
உயுத்தங்கள்நடக்கையிலே ரத்தக்கடலோடும்
மெத்தெனவேநானுரைத்தேன் சற்றேநின்றுவாரும்

வேறு

அப்போபெருந்திருவாள் அரிவையருமேதுசொல்வாள்
ஆனமலைக்குறத்தி அழகானகட்டுவச்சி
வர்னமலைக்கட்டுவச்சி வாக்குரைப்பாயெந்தனுக்கு
என்கணவன்ராச்சியத்தை யாண்டுமிருப்பேனே
அத்திபுரப்பட்டணத்தை யாளுவாரோஎன்புருஷன்
ஒத்தரசாளுவாரோ வுத்தமியேஎன்புருஷன்
பங்காளிப்பஞ்சவர்கள் பாதிநாடாளுவாரே

இன்னம்வருவாரோ எங்கள் தாயாதிகளும்
சாகாமலேபிழைத்துத் தரணிபதியாளுவாரோ
செத்துமடியாமல் ஜெகதலத்தையாளுவாரோ
சண்டைபண்ணிநாடுநகரந் தாமேகெலிப்பாரோ
மறுபடியும்வருவாரோ மன்னரந்தப்பஞ்சவர்கள்
எனக்குத்தெரியச்சொல்லு மேந்திழையேகட்டுவச்சி
அப்போமலேக்குறத்தி அழகாகயேதுசொல்வாள்

குறம்

பாரசபைதனில்விரித்த கூந்தலடியம்மே
படுகளத்தில்முடிப்பேனென்று போனுள்வனவாசம்
உங்கள்சபைதனில்விரித்த கூந்தலடியம்மே
உயுத்தத்தில்முடிப்பேனென்று போனுள்வனவாசம்
நானொருத்தியல்லவோடி தலைவிரித்துநின்றேன்
இந்த-உலகமெல்லாந்தலைவிரித்து வாச்சுதென்றுபோனுர்
வஞ்சனைகள்செய்ததொரு மன்னவரையெல்லாம்
ரணக்களத்தில்முடிப்பேனென்று போனுர்கள்வனவாசம்
பத்தினியாள்விரித்ததொரு கூந்தலது அம்மே
பரலோகம்விரிக்குமென்று போனுள்வனவாசம்
அருந்ததியாள்விரித்ததொரு கூந்தலது அம்மே [ம்
நாளை-அனைவர்களும்விரிப்பாரென்று போனுள்வனவாச
பதினெட்டாம்நாளையிலே படைபொருதும்சண்டையிலே
பார்மன்னர்மார்மேலே முடிப்பாள்தலைக்கூந்தல்
அவனுடையஉதிரத்தாலே அள்ளித்தலைசீவி
அவனுடையமார்பெலும்பைச் சீப்பாகவுவந்து
பக்கக்குடல்பதினுறும் பத்தினியாளெடுத்து
நாளை-படுகளத்தில்நாரி தலைமுடிப்பாளோடிகூந்தல்
நூற்றொருவர்பூமுடியை நொருங்கடித்தபின்பு
வேற்றுமைகள்தொலைந்ததென்று வருவாள்பாஞ்சாலி
பங்காளிதலைகளெல்லாம் பற்றறுத்தபின்பு
பத்தினியாள்தலைமுடித்துப் பாராளவருவாள்
அன்றேடேமுடியும் ஐவருடசபதம்
அரசாளவந்திடுவா ராரணங்கேகேளும்
இந்தமட்டுஞ்சொன்னகுறி யினிபிசகாதம்மா
ஈஸ்வரனுர்ஆணையென்று யிருந்தாள்குறத்தி
கூடைதனில்செந்நெல்லு கொட்டலியோஅம்மே

கொம்பனையேஎன்மனைக்குக் கொண்டுநானடப்பேன்
எட்டொருநாளாச்சுதடி யித்தெருவேவந்து
என்கணவனெனைத்தேடி யிங்குவருவாண்டி
பத்தொருநாளாச்சுதடி வீட்டைவிட்டுவந்து
பர்த்தாவுமெனைத்தேடி வருவாரடிபெண்ணே
என்றுமவருரைக்க ஏதுசொல்வாள்பெருந்திருவாள்

வேறு

குறத்திசொன்னதெல்லாங் கொற்றவர்க்கேநற்காலம்
மாதேநீசொன்னதெல்லாம் மயிலணைக்கேநற்காலம்
எங்களுக்குற்ற குறியொன்றுஞ்சொல்லலியே
மன்னவருக்குற்றகுறி மயிலணையேசொல்லலியே
பஞ்சவருக்காக வுரைத்தாயேபத்தினியே
காடாண்டபஞ்சவர்கள் நாடாண்டுவருவாரோ
ஐவரும்வந்துமல்லோ அரசாண்டிருப்பாரோ
நூலால்கடுந்திரளார் நூற்றொருவரானவரும்
இருந்தரசையாள்வாரோ எனக்குரையுங்கட்டுவச்சி
நிச்சயமானகுறி நீயுரையுங்கட்டுவச்சி
அந்தவுரைகேட்டு அருங்கிளியாளேதுசொல்வாள்
நான்சொன்னகுறிகளெல்லாஞ் செவிதனக்கேறலியோ
பார்வதிக்குமீஸ்வரருக்கும் பகுந்துகுறியுரைத்தேன்
வேலவர்க்கும்வள்ளியற்கும் வேணகுறியுரைத்தேன்
இந்திரற்குந்தேவியற்கும் இசைந்துகுறியுரைத்தேன்
இராமர்க்குஞ்சீதையர்க்கும் நல்லகுறியுரைத்தேன்
பிர்ம்மாசரஸ்வதிக்கும் வேண்டுங்குறியுரைத்தேன்
அந்தந்ததேவரெல்லாம் அடுத்துமெனைக்கேட்டதில்லை
இன்னமின்னஞ்சொல்லுமென்று ஏந்திழையேகேட்கிறாய்
ஆனாற்கேள்சொல்லுகிறேன் ஞரணங்குநாயகமே

குறம்

நாகக்கொடிதனைப்படைத்த நறுநுதலாய்கேளாய்
உன் - நாயகராளுவதைச் சொல்லுகிறேன்கேளம்மே
நூலால்கடுந்திரளார் நூற்றொருவரம்மே
துட்பமுடனரசாண்டு அற்பமதில்வாழ்வார்
பத்துதிங்களுண்டடியோ பாராளமன்னர்
பதினோராந்திங்களிலே படைமுகத்துமாள்வார்
எட்டிரண்டுதிங்கள்மட்டு மிருந்தரசையாள்வார்

இனியதொருதிங்களிலே யிறந்திடுவார்முடிகள்
பத்தினியார்சாபத்திலே பாரதப்போர்தன்னில்
பஞ்சவர்கள்கையாலே மாண்டிடுவாரம்மே
அருங்கிளியாள்சாபத்தினுல் அரையர்களுமம்மே
ஐவருடகையாலே மாண்டிடுவார்சொன்னேன்
படுகளத்தில்மாண்டபின் கேளடிபெண்ணே
பஞ்சவர்களரசாள்வார் பார்முழுதுமல்லோ
அருங்கிளியாள்கூந்தல்தனே அங்கனவேமுடித்து
ஐவருடன்வாழ்ந்திருப்பார் ஆரணங்கேகேளும்
என்றுமிந்தக்குறத்திசொல்ல இளங்கொடியாள்கேட்டு
இடிவிழுந்தாப்போல்முழுதும் ஏங்கியழுதாளே
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்நாயகமும்

வேறு

மார்பிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதாள்
ஆர்கடகக்கையாலே அறைந்துகொண்டுதானழுதாள்
மோதித்தன்கையை முகத்திலறைந்துகொண்டாள்
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்தானழுக
அங்குமொருதாதி அறிவுடையாளோடிவந்து
கொப்புத்திருத்தியல்லோ கோர்வைமிகத்திருத்தி
வளையலதுதிருத்தி வாளிமிகத்திருத்தி
பூணுரரேசகத்தைப் புழுதிமிகத்திருத்தி
ஆறவிடுமென்றுசொல்லி அவளெழுந்துபோய்நடந்தாள்
கட்டார்கருங்குழலாள் காந்தாரிமுன்னேவந்து
செம்பொன்திரை நீக்கிச் சிக்கெனவேதெண்டனிட்டு
தெண்டனிட்டதாதி திரும்பியெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
காந்தாரிநாயகிக்குக் கன்னியருமேதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்மாளிகையில்
குறத்தியங்கேவந்ததுவுங் குறிகளுரைத்ததுவும்
கானகக்குறத்தியங்கே கைபார்த்துச்சொன்னதுவும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளப்போகிறதும்
மன்னர்பஞ்சபாண்டவரும் வையகத்தையாளுவதும்
காசிநாடாளுங் கருணரிங்கேமாளுவதும்
நூலால்கடுந்திரளார் நூற்றெருருவர்மாளுவதும்
பாஞ்சாலன்பெற்றகன்னி பத்தினியாள்துரோபதையாள்

கொற்ருர்குழலியவள் கூந்தல்முடிப்பதுவும்
அத்தனையுஞ்சொல்லி வுரைத்தாளந்தக்கட்டுவச்சி
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்தான்கேட்டு
ஆனந்தமாரி அழுதுபடுத்தாள்காண்
அந்தவிசேஷம் அறிக்கையிடவந்தேனென்ருள்
கட்டார்கருங்குழலி காந்தாரிதான்கேட்டு
குறியுரைக்கவந்ததொரு கொம்பனையாள்கட்டுவச்சி
குறிசொல்லப்போனுளோகொம்பனை நீசொல்லுமென்ருள்
அங்கேயிருக்காளோ ஆரணங்கேசொல்லுமென்ருள்
அந்தவுரைகேட்டு அழகானதாதியர்கள்
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்மாளிகையில்
குறிகளுரைத்து யிருக்கிருள்பைங்கொடியும்
அந்தவிசேஷம் அறிக்கையிடவந்தேனென்ருள்
குருடனிடதேவி கொம்பனையுந்தான்கேட்டு
அவளாங்காரக்கோபமுடன் அடித்தேளழுந்திருந்து
தாதிமுகம்நோக்கித் தையலருமேதுசொல்வாள்
தேசத்தையாளுந் திரியோதிரனுர்க்கு
சொல்லிநீவாடியென்று மெல்லிநடக்கலுற்ருள்
அறிக்கையிட்டுவாருமென்று ஆரணங்குவாராளே
அரண்மனையேழுகட்டும் அத்திபுரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்மாளிசென்று
மருமகளைத்தான்பார்த்து மகாராசியேதுசொல்வாள்
என்காண்மருமகளே யிந்தவிதியுனக்கு
இவளார்காணும்கட்டுவச்சி அடைவாயுரைத்தவள்காண்
எங்கிருந்தெங்கேவந்தாய் இந்தக்குறியுரைக்க
என்றுமவளுரைக்க யேதுசொல்வாள்கட்டுவச்சி

குறம்

ஆதிசிவனூடிருந்து வந்தேனடியம்மே
அத்திபுரங்குறியுரைக்க அழகாகவந்தேனுன்
கொச்சிமலைகுடியிருக்குங் குறத்தியடிநாங்கள்
குமரேசர்வள்ளியற்நுங் குறியுரைப்போம்நாங்கள்
பச்சைமலைகுடியிருக்குங் குறத்தியடிநாங்கள்
பரமசிவனுடையவட்குங் கைபார்க்குங்குறத்தி
மலையாளந்தேடி மகிழ்ந்துகுறிசொன்னேன்

வளமானசெந்நெல்லெல்லாம் வாங்கிவந்தேனம்மே
அல்லியுடசீமையிலே ஆனகுறஞ்சொன்னேன்
அல்லியவள்மனமகிழ்ந்து நெல்லுமள்ளியிட்டாள்
வம்பருக்குந்தும்பருக்கும் வாய்த்தகுறிசொன்னேன்
கம்பெனக்குஅள்ளியிட்டாள் கட்டழகியம்மே
ஆருயிரம்பாண்டியர்க்கு அழகுகுறிசொன்னேன்
சீரானகேழ்வரகைத் திறமுடனேயளித்தார்
இந்நாட்டுக்குறியுரைக்க யிங்குவந்தயிடத்தில்
எந்தனுக்குப்பெருந்திருவாள் என்னகொடுப்பாளோ

வேறு

இப்படியாய்சொல்லி யிருக்கின்றாள்கட்டுவச்சி
கட்டார்குழலியரும் காந்தாரிதான்கேட்டு
குறத்திமுகம்நோக்கி கொம்பனையுங்கூறுகிறாள்
முன்னேவுரைத்தகுறி சொல்லுங்காண்மொய்குழலி
என்-மருமகட்குசொன்னகுறி எந்தனுக்குச்சொல்லுமென்
அப்போமலைக்குறத்தி யாரணங்கேதுசொல்வாள் [றாள்
முறத்திலேசெந்நெல்கொண்டு வாருங்காண்மொய்குழலே
செந்நெலதுகொண்டு சொல்லுவோங்குறியுனக்கு
அப்போதுகாந்தாரி ஆரணங்கேதுசொல்வாள்
கொத்துசம்பாமுத்துசம்பா குடமல்லிசம்பாவும்
கொண்டுவந்துபொன்முறத்தில் கொட்டினாள்குறத்திமுன்
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குதான்பார்த்து [னே

குறம்

நெல்லையவள்கைப்பிடித்து நேர்ந்தகுறியென்பாள்
பொற்புடையபாஞ்சாலி புதுமைக்குறிசொல்வாள்
முக்கணனார்தன்மகனே முன்னடத்தவேண்டும்
மூஷிகவாகனரே குறியுரையுமையா
விகடசக்ரகணபதியே வாக்கருளவேண்டும்
வேலவரேவள்ளியரே வாக்கருளவேண்டும்
பச்சைமலைத்தாயாரே பாவைக்குறியுரையும்
பரமசிவன்பார்வதியே பகர்ந்துகுறிசொல்லும்
அச்சுமலைகொச்சுமலை நடந்துகுறிசொல்லும்
நாராயணர்லட்சுமியே நாவில்வந்துவுரையும்
தெய்வங்களைநினைத்தாலே சிலிர்த்துகொள்ளுதுடம்பு
தேகமெல்லாம்நடுங்குது தேன்மொழியேகேளும்

குறக்கூடைகுலுங்குதடி கொம்பனேயேம்மே
கோலவிழிதுடிக்குதடி குறிகள்சொல்வேன்கேளும்
முன்னடந்தகாரியங்க ளொன்றுரைப்பேனம்மே
முத்துமுடிபாண்டியர்க ளரசாளும்நாளில்
பத்தாண்டுசென்றபின்பு பாவையரே நீயும்
பார்மீதிலேவளர்ந்து சமைந்தாயடிபெண்ணே
உந்தனுக்குக்கைபார்த்த சாஸ்திரிமாரம்மே
உனக்குசொன்னலக்ஷணங்க ளுண்மைஎன்றுசொல்வேன்
மண்டலத்தையாளுகிற மன்னர்களானாலும்
மாதேவர்முதலான தேவர்களானாலும்
தெய்வபதியாளுகிற தேவர்களானாலும்
தென்னிலங்கையாளுகிற ராட்சதரானாலும்
உன்னைத்தொட்டுமணம்புரிந்தா லுடனேயவர்மாள்வார்
என்றுரைத்தார்வேதியர்க ளிச்சபையிலம்மே
என்குறிகள்பொய்யோடி இன்னமுண்டுசொல்வேன்
அதுவறிந்தவுன்தகப்ப னுயாசப்பட்டு
அரசாண்டிருக்கையி லங்கொருநாளம்மே
அருகிருந்தமந்திரிக ளாலோசனைசெய்து
அரசனதுமுகம்நோக்கி யவர்களெடுத்துரைப்பார்
மன்னவரே நீர்கேளு மாலோசனையொன்று
மகளாரைமாலையிட மர்மம்சொல்லுகின்றோம்
மணமாலைபந்தலிட்டு மங்கையரைவைத்து
மன்னவரேயாட்டுகிடா கொண்டுவந்துமல்லோ
ஆட்டுகிடாகைதனிலே மங்கிலியந்தன்னை
ஆரணங்குகழுத்துதனில் தரியுமென்றாரப்போ
நிமிலியந்தஅரசியற்கு நினைத்தகுறிசொல்வாள்
பொன்முறத்தைக்கைப்பிடித்துப் புதுமையிதுயென்பாள்
மங்கிலியந்தரித்ததொரு ஆட்டுகிடாமாண்டால்
மன்னர்வந்துமங்கையரை மாலையிடுவார்கள்
அந்தவுரைகேட்டு வுன்தகப்பனம்மே
அப்படியேநல்லதென்று அவனுஞ்சம்மதித்தான்
பதிங்காதம்பந்தலிட்டு பாவையரேயுனக்கு
பாங்கானகிடாக்கையில் தாலியதுதந்தார்
ஆட்டுக்கிடாவுன்கழுத்தில் தாலிகட்டியம்மே
ஆறுசுக்கலாய்வெடித்து அந்தக்கிடாமாள
அதுசமயந்தானறிந்து அந்தகனுமம்மே

ஆரணங்கையெந்தனுக்கு அருளுமென்றுகேட்டான்
அதுகேட்டவுன்தகப்ப னல்லதென்றுசொல்லி
சதுரானகலியாணந் தானுமங்கேமுடித்தான்
மண்டலத்தையவருமல்லோ வாண்டிருக்கும்நாளில்
மங்கையரேயுந்தனுக்கு மைந்தரில்லையென்று
மேன்மையுண்டுசெல்வமுண்டு ராச்சியங்களுண்டு
நாடாளமைந்தரில்லை யென்றிருந்தாயோடி
உன்-புருஷனுடன்பிறந்த பாண்டுமகாராஜன்
உம்மையுடரவர்மணந்த பத்தினியாள்குந்தி
குந்தியம்மாள்தபவதி யானுளென்று நீயும்
கொள்ளாதவருத்தமுற்றாய் குமரியம்மே நீயும்
அடங்காதகோபமுடன் அங்கொருநாளம்மே
ஆற்றங்கரைஸ்நானம்பண்ணி யருங்கிளியாள்வாராள்
மின்னல்மின்னமழைபொழியும் வேளையதுவம்மே
மெல்லியரே நீபோய் பலாமரத்தைச்சேர்ந்தாய்
அதிலிருந்துரிஷியாரு மணிந்தாரோடியம்மே
அப்போதுசோபமது வுண்டாச்சுதுனக்கு
நூற்றொருமாதமது சென்றதல்லோபிள்ளை
பெறுவாயென்றுமேதான் ரிஷியுனக்குரைத்தார்
அந்தவுரைகேட்டு அகமகிழ்ந்துவந்தாய்
அப்போதுன்னோரகத்தி ஐந்துபிள்ளைபெற்றாள்
ஓரகத்திபிள்ளைபெற்றா ளென்றுசொல்லி நீயும்
உன்மனதுதாளாமல் வருத்தமுடனெழுந்து
எண்ணிவிசாரமுற்று உன்மனதுதாளாமல்
ஏந்திழையாள்பிள்ளைகளைப் பார்த்துமல்லோ நீயும்
ஆங்காரக்கோபமுடன் அறைந்துக்கொண்டு நீயும்
அடிவயிற்றிலிடித்துக்கொண்டு அடித்துக்கொண்டழுதாய்
தொண்ணூறுதிங்களிலே தோகையரே நீயும்
முன்னேவொருகுழவிதனை யெடித்திடித்துக்கொண்டாய்
அப்போதுபிண்டமது கலங்கியல்லோவம்மே
அதிலானவுதிரமெல்லாம் வெளியாச்சுதம்மே
நூற்றொருகிண்ணியிலே நுட்பமுடன்பிடித்து
நொறுங்காமல்விரைதனிலே அமுக்கிவைத்தாய்பெண்
நூற்றொருதிங்கள்சென்ற பிற்பாடுமைந்தர் [ணே
வேற்றுமைகளில்லாமல் வெளியானாரல்லோ
பொய்யோடிஎன்குறிகள் மெய்யோடிபுகலும்

பெருமையுள்ள அந்தகனார் மனுநீதியாலே
என்றுமந்தயிளங்குறத்தி தானுமங்கேநிற்க
இதுவறிந்தகாந்தாரி எண்ணமிடுவதையும்
வேறு-இப்படியாக இவர்களிருக்கையிலே
திரியோதிரன்சபைக்கு சென்றதொருதாதியர்கள்
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாதனத்தருகே சென்றிரங்கித்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பியெழுந்திருந்து
சீர்கடகக்கையதனை சிரசின்மேல்தூக்கிநின்றாள்
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
யார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றான்
ஆர்பணியுமல்ல அடியேன்றிருப்பணிதான்
நீயிங்கேவந்த தெனக்கறியக்கூறுமென்றான்
தாமக்குழலாள் தாதியருமேதுசொல்வாள்
பேர்பெற்றுடைய பெருமாளேயுன்பணிதான்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தாதியென்றாள்
அப்போதுதாதியரும் அழகாகயேதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்வாசலிலே
கட்டுவச்சிவந்ததுவும் கைபார்த்துசொன்னதுவும்
ஐவர்களாளுவதும் அரசமன்னராளுவதும்
பஞ்சவர்களாளுவதும் பார்மன்னராளுவதும்
பாஞ்சாலன்கன்னிதன்னைப் பதறித்துகிலுரிந்ததுவும்
அத்தனையும்சொன்னாளே அழகானகட்டுவச்சி
அந்தவுரைகேட்டு அருங்கிளியுமாமியுமாய்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பெண்டுகளும்
அவர்-அங்கேதலைவிரித்து அழுதுபுலம்புவதும்
அத்தனையுஞ்சொல்லி முடித்தாளவள்தாதி
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
சிந்தைகலங்கித் திடுக்கென்றுமெய்கலங்கி
ஒன்றுமொழியாமல் உத்தமனும்வீற்றிருந்தான்
பாட்டனார்வீஷ்டுமரும் பாராளுந்துரோணரும்
சிற்றப்பாவிதுரனும் சீருள்ளகாங்கேயனும்
காசிநாடாளுங் கருணருந்தாமறிந்து
நூலால்கடுந்திரளார் நூறுபேர்தம்பிகளும்
கானக்குறத்தியரைச் சிறையிடுவேனென்றுசொல்லி

கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
மார்விலங்குதோள்விலங்கு மாளாப்பெருவிலங்கு
கன்னியரைத்தான்பிடித்து கழுவிலிடுவோமென்று
அல்லவருங்கூடி அழகாகவாரார்கள்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிசென்றார்
கானக்குறத்தியரைக் கண்டுமந்தமன்னரெல்லாம்
நீ-ஆர்காணுங்கட்டுவச்சி அறியவுரையுமென்றார்
எந்தவூருங்களது எவ்விடமேசொல்லுமென்றார்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மாநகரமாள்வதற்கு மாதரவளேதுசொல்வாள்
குறம்-எந்தனது திருநாடு கேட்கிறையோதம்பி
எற்றவிடஞ்சொல்லுகிறேன் யாவர்களுங்கேளீர்
சந்திரர்களாளுவதும் எந்தனது நாடு
இந்திரனாராளுவதும் எந்தனது நாடு
ஈரேழுபதினாலும் எந்தனது நாடு
ஈஸ்வரனாராளுவதும் எந்தனது நாடு
சொக்கரவராளுவதும் எந்தனது நாடு
ஈஸ்வரியாளாளுவதும் எந்தனது நாடு
அண்ணாமலையாளுவதும் எந்தனது நாடு
உண்ணாமுலையாளுவதும் எந்தனது நாடு
கொலைகளவுமில்லாதார் எந்தனது நாடு
மோதிரங்கள்சீர்தழைக்கும் எந்தனது நாடு
பொய்யுரையாராளுவதும் எந்தனது நாடு
புண்ணியனார்வாசஞ்செய்யும் எந்தனது நாடு
முத்திரைமுத்தளக்கும் எந்தனது நாடு
முன்னோர்கள் தவம்புரியும் எந்தனது நாடு
கூடைதனில்செம்பளக்கும் எந்தனது நாடு
கொற்றவர்களாளுவதும் எந்தனது நாடு
வரன்முறைகள் தவறாத எந்தனது நாடு
வானவர்களாளுவதும் எந்தனது நாடு
வேறு-என்றுமவளுரைத்து நின்றாளேகட்டுவச்சி
நாட்டுவளப்பஞ்சொல்லி நாயகியாளங்கிருக்க
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
அனல்கேள்கட்டுவச்சி அடியேனொருவார்த்தை

கூடையில்முத்தளந்து கொட்டுவாரென்றுசொன்னாய்
முறத்தினில்முத்தளந்து மோருக்களிப்பேனென்றாய்
நீ-என்னகுறைவாகி வந்தீர்காணேந்திழையே
ஏதுகுறைவாகி இத்தெருவிலேவந்தாய்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மானகங்கொண்டவர்க்கு மங்கையருமேதுசொல்வாள்
குறம்-மழைகளில்லைசென்னலில்லை மண்டலங்கள்தோறும்
மகாராசனனவர் வர்த்தகங்களுண்டாகி
சென்னலில்லை தூரலில்லை சீமையெங்கும்தம்பி
சிறப்பானவிளைவுமில்லை தேசங்கள்முழுதும்
அத்திநகரரசாள்வீர் அரசர்களுண்டென்றாள்
அதுகேட்டுசென்னல்பிச்சை வாங்கவந்தேன் நானும்
கொச்சைக்குறத்தி குறிகளிங்கேசொல்லி
குறம்பாடிசென்னல்பிச்சை வாங்கவந்தேனென்றாள்
சன்னசம்பாசின்னசம்பா சாதிலிங்கசம்பா
சதிரானகேழ்வரகும் வாங்கிவந்தேனென்றாள்
வேறு-அந்தவுரைகேட்டு அரவக்கொடியோனும்
மாதுமுகம்நோக்கி மன்னவனுமேதுசொல்வான்
குறத்திமுகம்நோக்கிக் கொற்றவனுமேதுசொல்வான்
மானகரமாளும் மகாராசன்பெண்டுகட்கு
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகிக்கு
என் ஆச்சியற்குசொன்னகுறி யடியேனுக்குசொல்லுமென்
யாவர்க்கும்சொன்னகுறி எனக்குரையுமென்றான் [றார்
முன்னடந்தகாரியங்கள் மெல்லியரே நீயுரைத்து
இனிமேல்நடக்கும்வகை எனக்குநீசொல்லுமென்றான்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
கூறுவாள்கொம்பனையாள் கோதுங்கிளிபோல
வாய்திறந்துதானுரைப்பாள் மாதுநல்லகட்டுவச்சி
குறம்-நெல்விவிரைதான்பரப்பி நேர்ந்தகுறியென்பாள்
நீலக்கண் நிமலியரே வாக்கருளவேண்டும்
காஞ்சிநகரதனில்வாழுங் காமாட்சியென்பாள்
காளையற்குகுறியுரைக்க வாக்கருளுமென்பாள்
உச்சிதமாய்நெல்லெடுத்து உண்ணாமுலையென்பாள்
பச்சைமலைத்தாயாரே வாக்கருளுமென்பாள்
ஆயவரும்அலமேலு மிங்கெனவேவந்து
அரசனுக்குகுறியுரைக்க அருள்புரியுமென்றாள்

விக்கினவேலவரை வேண்டிமிகத்தொழுது
மெய்யானகுறியுரைப்பாள் மெல்லியருமங்கே
தேசமுழுதாளுகின்ற திரியோதிரமன்ன
சிறப்பானகுறியுரைப்பேன் சிந்தைமகிழ்ந்தருளும்
அவனிமுழுதாளுகிற அரசர்சிகாமணியே
ஆனகுறியானுரைப்பேன் அரனருமறிய
முன்னடந்தகாரியங்க ளொன்றுரைப்பேன்கேளும்
நித்திலங்குபூமுடியார் நிறைந்திருக்குஞ்சபையில்
நினைத்துக்கொண்டாய்மைந்தனுக்குக் கலியாணஞ்செய்ய
மன்னர்களைத்தானழைத்து மருமங்களையுரைத்து
பாரரசர்சம்பந்தங்கள் வேண்டுமென்று நீரும்
பாரளந்தான்தன்மகளைக் கொள்ளவென்று நீரும்
பலத்ததொருசபைதனிலே எண்ணமிட்டீர் நீரும்
அதுவறிந்துஉன்தகப்ப னுகாதென்றுசொல்ல
அறிவழிந்தசகுனியவ னுகுமென்றேயுரைத்தான்
மண்டலத்தையாளுகிற மன்னர்களே நீயும்
மாயன்முகம்நோக்கி வந்தீரல்லவென்று
ஆயருடசபைதனிலே அருகில்வந்துயிருந்து
அச்சுதரைப்பெண்கேட்க அவருஞ்சம்மதித்து
கோபாலர்பெட்டிரொம்ப கொட்டுமென்றூர்பணத்தை
கொற்றவனுமதற்கிசைந்து கொடுத்தான்வெகுபணத்தை
கொட்டிவந்தபொன்னையெல்லாம் கோபாலரெடுத்து
கொப்பெனவேபதராக்கி தூற்றிவிட்டார்காற்றில்
மறுபடியும்பொன்கொடுத்தால் பெண்கொடுப்பேனென்றூர்
மன்னவனே நீமகிழ்ந்து மன்னர்களையனுப்பி
களஞ்சியத்துப்பொன்னையெல்லாம் கொண்டுவரச்சொல்லி
கரியமாலானவர்க்குக் கணக்குடனே தந்தாய்
அதுவறிந்துசுந்தரியைத் தாரேனென்றுசொன்னூர்
அடவாகமுகூர்த்தமிட்டு அனுப்பிவைத்தாருன்னை
அவரெட்டா நாளையிலே முகூர்த்தமென்றுசொல்ல
எம்பெருமாள் தானுரைக்க ஏகிவந்தீர் நீரும்
அம்பலத்துசபையிலுள்ள யாவர்களும் நீரும்
ஐம்பத்தாறுதேசத்து மன்னர்களும்வந்தார்
இலக்குணற்குமணக்கோலம் நன்றாகச்செய்து
நாடாளும்ராஜர்களும் நலமுடனேகூடி
மூன்றுநாளாகையிலே முடிமன்னரெல்லோரும்

முத்துமுடி ராஜனுடன் பயணமிட்டுவந்தீர்
ஆயருடபதினேக்கி அனைவோர்களும்வந்து
அரிராமர்தன்கொலுவி லிருக்குமந்தவேளை
அருச்சுனனுரீன்றெடுத்த அபிமன்னன் தானும்
அவனுடையதோழர்களும் அங்ஙனவேவந்து
மணவறையில்வீற்றிருந்த இலக்குணரையிழுத்து
மன்னர்சபைமுன்பாக மயிர்பிடித்துச்சிறைத்தார்
ஐந்து நல்லகுடுமிவிட்டு அவன் தலையைச்சிறைத்து
அரசாணிக்காலுடனே யிலக்குணனைக்கட்டி
மாயவரைப்பிடித்திழுத்து மரத்தோடேகட்டி
மன்னவரேயுங்களைத்தான் மண்டைநொறுங்கடித்தி
மாயன்மகள்சுந்தரிக்கு மணமாலைசூட்டி
மறுபடியுந்தன்பதிக்கு மன்னன்வந்துசேர்ந்தான்
அபிமன்னன்போனபின்பு அரசர்களே நீங்கள்
ஆயன்பதிவிட்டெழுந்து அபிமானங்குலைந்து
வாளபிமன்செய்ததனுல் மானபங்கமாகி
மரியாதைதாழ்வாகி மண்டலத்தேவந்தீர்
பொய்யோதான்என்குறிகள் மெய்யோநீபுகலும்
பூமிமுழுதாளுகின்ற புண்ணியனேயென்ருள்
முன்னடந்தகாரியங்கள் இன்னமுண்டுசொன்னுல்
முடியாதுபொழுதுமில்லை மன்னவரேகேளும்
முன்னடக்குங்காரியங்கள் எடுத்துரைப்பேன்கேளும்
ஈரேழுலகளந்த ஈஸ்வரனுரறிய
பஞ்சவரைக்கொண்டுவந்து பாரசபைநிறுத்திப்
பங்கப்படுத்தியல்லோ பார்விலங்கைப்போட்டீர்
ஐவர்களைச்சூதாடி யறைதனிலேயடைத்து
ஆரணங்கைக்கொண்டுவந்து அம்பலத்தில்நிறுத்தி
ஐவருடதேவிதன்னை அம்பலத்தில்நிறுத்தி
அனைவோருந்தாமறிய ஆடையுரிந்தீர்கள்
பத்தினியாள்மனதறிய பாரசபைதனிலே
பரமசிவன்பார்வதியைச் சாட்சிவைத்தாளங்கே
மாதுநல்லாள்மனதெரிய மன்னர்சபைதனிலே
மாயவரைச்சீதையரை சாட்சிவைத்தாளங்கே
பொற்கொடியாள்மனதறியப் போர்மன்னர்சபையில்
பிரம்மாசரஸ்வதியை சாட்சிவைத்தாளங்கே
வெல்புருவங்கண்ணுளும் விரிந்ததலையுடனே

மீளாதசாபமிட்டுப் போனாள்வனவாசம்
மன்னாவுன்பூமுடியை மண்ணில்விழத்தரித்து
மயிர்முடிப்பேனென்றுசொல்லி குடல்தனையெடுத்து
கொண்டைமுடிப்பேனென்று போனாள்வனவாசம்
பன்னிரண்டுமோராண்டு சென்றவுடன்மன்னா
பாரதப்போர்முடிக்கையிலே பஞ்சவர்களைவர்
ஆயனொருசாரதியாய் அர்ச்சுனன்தேரேறி
அரசுமன்னர்பூமுடியை அடங்கலுமேதரித்து
நூற்றொருவர்பூமுடியை நொறுங்கடித்தபின்பு
நொடிப்பொழுதிலுன்முடியை தரையில்விழவடித்து
பீமனதுதெண்டாலே நீமடிந்தபிறகு
விபரீதப்பாரதப்போர் முடிந்ததென்றுசொன்னால்
பாஞ்சாலன்எக்கியத்தில் வந்துதித்தகன்னி
படுகளங்கள்முழுமையுந்தான் பாஞ்சாலியறிந்து
பாவையருந்தன்கூந்தல் வாரிமுடிப்பாளே
கூந்தல்முடித்தானபின்பு கொற்றவர்களைவர்
கோடானயாகஞ்செய்து குவலயத்தையாள்வார்
கருணனுடமைந்தனவன் காளைவிஸ்வகேது
கனத்தநல்லமுடிசூட்டி அத்திபுரமாள்வான்
அங்கவளநாடனைத்தும் அவனாளப்போறான்
அவனியெல்லாம்பஞ்சவர்களாண்டுமிருப்பார்கள்
மன்னரந்தப்பட்டணத்தை யரசாளப்போறார்
மாளாதபெருநரகம் நீங்களுமேயாள்வீர்
ஐவரந்தபஞ்சவர்களரசாண்டுவாழ்வார்
அறியாதபெருநரகம் நீங்களுமேயாள்வீர்
என்றுமந்தகட்டுவச்சி எடுத்துரைத்தாளங்கே
இதுகேட்டுதிரியோதிரராஜன் ஏங்கிமுகம்வாடி
வேறு-குறத்தியுரைகேட்டு கொற்றவனும்வேறுபட்டு
கட்டுவச்சிதானுரைக்கக் காளையதுகேட்டு
அவன்சிந்தைமனமகிழ்ந்து திடுக்கிட்டுமெய்மறந்து
மற்றுமொருநினைவால் மன்னவனும்கோபமதாய்
காணக்குறத்தியல்ல கட்டுவச்சிதானுமல்ல
பஞ்சவரைமாலையிட்ட பாஞ்சாலியென்றறிந்து
ஐவரையும்மாலையிட்ட ஆரணங்குயென்றறிந்து
அங்குள்ளசேவகரை ஆணழகன்தானழைத்து [றான்
தூதுவரைத்தானழைத்துத் தொழுவிலங்குபோடுமென்

கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
தோள்விலங்குமார்விலங்கு தூக்காப்பெருவிலங்கு
தூக்காவிலங்குமிட்டுத் தொழுவிலேபோடுமென்றான்
ஆரணங்குகுறத்தியரை அடையும்கிடங்கிலென்றான்
அப்போது தூதுவர்கள் அங்ஙனமேயேதுசெய்தார்
கட்டழகிமாதினுக்குக் கழட்டாவிலங்குமிட்டு
ஆரணங்குமாதரையு மறையிலேதள்ளிவைத்து
சேர்விலங்குபூட்டியல்லோ சிறையிலேதானடைத்தி
மாளாவிலங்குமிட்டு மங்கையரைத்தானடைத்தார்
இப்படியாகயிவள் இங்கேயிருக்கையிலே
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
மாயவரைத்தானினைந்து மங்கைபுலம்புகிறாள்
கோவிந்தாவைகுந்தா கோபாலாவாருமென்றாள்
அம்பலத்துவாசலிலே அன்றுவந்துகாத்தீரே
அப்போதுகாத்ததுபோல் இப்போதுகாருமையா
ஆரணங்குஎந்தனையும் ஐவரிடஞ்சேருமையா
ஆனையைக்கார்த்தாப்போ லடியாளைக்காருமையா
மைந்தரைக்கார்த்தாப்போ லடியாளைக்காருமையா
என்றுபுலம்பி யிருக்கிறாள் துரோபதையும்
அந்தச்சமயமது வறிந்தாரேயெம்பெருமாள்
மாயன்பெருமாள் மனதில்நினைவாகி
தேசத்தையாளுந் திரியோதிரன்மாளிகையில்
மாளுகங்கொண்ட மகாராசன்வாசலிலே
ஐவருடதேவி ஆரணங்குதுரோபதையாள்
குறமாதரைப்போல் கொம்பனையாள்வேஷங்கொண்டு
கட்டுவச்சிபோலக் கன்னிவடிவெடுத்து
சகாதேவராசனைத் தகுந்தகுழந்தையாக்கி
மைத்துனனானவனை மைந்தனுருவாக்கி
ஐவருடதேவி அபிஷேகப்பத்தினியாள்
குறத்திவடிவாகிக் கொம்பனையாள்வந்ததுவும்
கட்டுவச்சிபோலாகக் கன்னியிங்கேவந்ததுவும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள் நாயகிக்கு
கைபார்த்துகட்டுவச்சி கனத்தகுறிசொன்னதுவும்
முன்னடந்தகாரியங்கள் முழுமையுமுரைத்ததுவும்
இனிநடக்குங்காரியங்கள் யாவுமுரைத்ததுவும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள் தானறிந்து

அழுதுபுலம்புவது மத்தையர்க்குச்சொன்னதுவும்
மண்டையுடைத்தழுது மாமியர்க்குச்சொன்னதுவும்
மாமியதுவறிந்து மாளிகைக்குவந்ததுவும்
குறத்தியவள்மொழியைக் கொம்பனையாள்கேட்டதுவும்
மயிலனையாள்தன்வார்த்தை மாமியவள்கேட்டதுவும்
மைந்தருக்குச்சொல்லி அனுப்பினதுமங்ஙனமே
மானகங்கொண்ட மகனுக்குரைத்ததுவும்
நாகக்கொடிபடைத்த ராசனறிந்ததுவும்
குறத்தியருகில்வந்து குறியுரைக்கச்சொன்னதுவும்
பாவிதிரியனுக்குப் பாவைகுறிசொன்னதுவும்
கேட்டுஇடிவிழுந்து கீர்த்தியில்லாமன்னவனும்
அரும்பாவிசண்டாள னாலோசனைகள்செய்து
பஞ்சவர்கள்தேவியென்று பாவியறிந்துகொண்டு
ஐவருடதேவியென்று அரும்பாவிதானறிந்து
பாஞ்சாலன்கன்னியற்குப் பாரவிலங்கிட்டதுவும்
அருங்கிளியாள் துரோபதையை அறையிலடைத்ததுவும்
அத்தனையும்தாமறிந்து ஆயரெழுந்திருந்து
கனமோசம்வந்ததென்று கரியமால்தானெழுந்து
துவாரகைவிட்டுமல்லோ சுவாமியங்கேவாராராம்
வேர்க்கவிரிவிரிக்க விராடபுரத்தில்வந்து
ஆருமறியாமல் அங்கொருவர்காணமல்
எவருமறியாமல் இங்கொருவர்காணமல்
இருவருக்குமுன்பிறந்த இளவிசயன்முன்னேவந்து
அருச்சுனனார்முன்னேவந்து ஆயருமேதுசொல்வார்
வாள்விசயன்முன்னேவந்து மதிமோசம்வந்ததுகாண்
அருச்சுனராஜாவே அனர்த்தம்வந்துநேர்ந்ததுகாண்
வாள்விசயாமன்னவனே மதிமோசம்வந்ததுகாண்
கொற்றார்குழலியரைக் கொடியசிறையில்வைத்தான்
கால்விலங்குகைவிலங்கு இட்டுச்சிறையில்வைத்தான்
காவலுள்ள துரோபதையைக் கடுகவழைக்கவேண்டும்
நீகொற்றவனார்வீரியரே குறவனைப்போல்வாருமென்றார்
அப்போதுவாள்விசயன் அரிராமர்தன்வாயால்
கொற்றவனார்வீரியருங் குறவேஷமானாரே
அணிப்பிள்ளையைக்குத்தும் ஆண்மைகுறவனானார்
கரடிபுலிகுத்தும் கன்னக்குறவனானார்
தட்டிவரிந்துகட்டிச் சல்லடமுமேற்பூண்டு

வில்லம்புகைபிடித்து வேந்தன்முதுகணிந்து
கருவேப்பிலையெடுத்துக் கடுகெனவேதோளிலிட்டு
சுண்டைக்காய்வற்றலது சுக்கன்வற்றல்தானெடுத்து
காட்டுக்களாக்காயும் கடுகெனவேகைபிடித்து
குறவனைப்போலாக வாரானேகொற்றவனும்
கன்னக்குறவனைப்போல் வாரானேகாளையவன்
காடுசெடிதாண்டி கரியமலைதாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
அத்திபுரஞ்சேர்ந்தா னாலழகுமன்னன்
இராசமன்னர்வீதியிலே நடந்துவாரான்வாள்விசயன்
சிங்கியைக்காணாமல் தேர்விஜயன்தேடிவந்தான்
குறத்திதனைக்காணாமல் குறவன்தேடிவாரான்
அத்திபுரம்வீதியிலே ஆணழகனேதுசொல்வான்
சுண்டைக்காய்கொள்வீரோ சுக்கங்காய்கொள்வீரோ
காட்டுக்கிளாக்காய் கன்னியரேவேண்டுமோதான் [டோ
கிலுகிலுப்பைகொள்வீரோ கன்றுதுப்புகொள்வாருண்
கொற்றவர்கள்வீதியிலே குறத்திதனைக்கண்டதுண்டோ
மன்னவர்கள்வீதியிலே மங்கையரைக்கண்டதுண்டோ
மைந்தரும்மாதருமாய் மாளிகைவிட்டுவந்தார்கள்
எட்டுநாளாச்சுதையா இளங்குறத்திவீடுவிட்டு
பத்தொருநாளாச்சுதையா பாவைநல்லாள்வீடுவிட்டு
கைலாயம்வீடுவிட்டுக் கடுகெனவேவீடுவந்தாள்
வைகுந்தம்போயிருந்து வடிவழகிவீடுவந்தாள்
எமலோகம்போயிருந்து இளங்கொடியாள்வீடுவந்தாள்
நாகலோகம்போயிருந்து நாயகியாள்வீடுவந்தாள்
ஐம்பத்தாறுதேசமும் இவளறியாநாடுமில்லை
அவள்எங்கேசென்றாலு மிளங்கொடியாள்வந்திடுவாள்
எட்டொருநாளாச்சுதல்லோ என்மனையாள்வீடுவிட்டு
பத்தொருநாளாச்சுதல்லோ பத்தினியாள்வீடுவந்து
ஏச்சுக்குஏச்சல்லோ என்குலத்தார்தாமறிந்தால்
ஓரகத்திமச்சினிமார் வுதாசினங்கள்சொல்லிடுவார்
மாமியார்தானறிந்தால் மட்டுமருங்குவையார்
மாசில்லாவம்மிசத்தில் மருவுபடநாளாச்சு
ஆரணங்குதன்னாலே அழும்புவரநாளாச்சு
அழகுள்ளகன்னியென்று அடக்கிவசங்கொண்டார்கள்
வடிவுள்ளகன்னியென்று வையகத்தார்கொண்டுசென்றார்

பாரப்பொடிமருந்தை சுந்தரிக்குப்போட்டார்களோ
சொக்குப்பொடிமருந்தை சுந்தரிக்குப்போட்டார்களோ
மந்திரத்தால்தந்திரத்தால் மாதையழைத்தார்களோ
ஆண்மைவலுமையினு லடக்கிவசம்கொண்டார்களோ
என்றுசொல்லியக்குறவன் ஏங்கியழுதுவாரான்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்வீதியெல்லாம்
கன்னியரைத்தேடியல்லோ காளையழுதுவாரான்
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்வீதியிலே
காட்டுக்குறவனவன் கதறிப்புலம்புகிறுன்
குறத்தியைக்காணுமல் கூவியழுகிறுனே
வாடிப்புலம்புவதும் மட்டுமிதங்களில்லே
சொல்லிப்புலம்புவதும் செவிகேட்கமுடியவில்லே
அங்கிருக்கும்தாதியர்க ளணியிழைமார்ஓடிவந்து
ஆர்காணும்நீகுறவா அழுதுபுலம்புவதேன்
ஏவர்காணும்நீகுறவா யிங்கேபுலம்புவதேன்
அழுதவயணமதை ஆரணங்குசொல்லுமென்ருள்
புலம்பும்வகையேது புண்ணியனேசொல்லுமென்ருள்
அப்போதுகுறவனவ னழகாகயேதுசொல்வான்
குறம்-கன்னியெங்கள்கட்டுவச்சி காளகுறமுறைக்க
கண்டுவந்தவீதிகளில் குறமுரைக்கவந்தாள்
மாலேயிட்டநாள்முதலாய் ஏனைப்பிரிந்ததில்லே
மாதுநல்லாள்வீடுவந்து வாரமொன்றதாச்சே
கூரையிட்டநாள்முதலாய்க் கொற்றவனேப்பிரியாள்
கொம்பனையாள்வீடுவந்து வாரமொன்றதாச்சே
எட்டொருநாளாச்சுதம்மா என்வீடுவந்து
இளங்கொடியாளிருப்பிடந்தான் எங்கேநானறியேன்
பத்தொருநாளாச்சுதம்மா பாவைமனேவந்து
என்பத்தினியாளிருக்குமிடம் பாவியும்நானறியேன்
கன்னியரைக்கண்டாலே கடுகெனவேயழைத்து
கலிராமர்தன்னருளால் கடுகிமனேபோவேன்
உத்தமியைக்கண்டாலே உடனேநானழைத்து
உம்பர்பிரான்தன்னருளால் வீடுபோய்ச்சேர்வேன்
கன்னியரைத்தேடுவது கலிராமரறிந்தால்
கனமோசம்வந்திடுமே எங்கள்குலந்தனக்கு
பத்தினியைத்தேடுவது பரமசிவனறிந்தால்
பழிபாவம்நேர்ந்திடுமே எங்கள்குலந்தனக்கு

மெல்லியரைத்தேடுவது வள்ளிவேலர்றிந்தால்
வெகுமோசம்வந்திடுமே குறக்கூட்டந்தனக்கு
கொம்பனையாள்வீடுவர வில்லையென்றேயுரைத்தால்
குடிப்பழுதுவந்திடுமே குறக்கூட்டந்தனக்கு
ஏச்சானசாதியல்லோ எங்கள்குறச்சாதி
ஏழானசாதியற்குள் கீழ்சாதிநாங்கள்
காக்காய்தின்போம்கழுகுதின்போம்காட்டோணுன்சுடுவோம்
கன்னியரைவிலைக்குவிற்று யமுதுபொசியோமே
மானைக்குத்திவிருந்திடுவோம் மாயக்குறச்சாதி
மனையாட்டிதன்னைவிற்று அமுதுபொசியோமே
ஏனம்தின்போம்மிருகந்தின்போம் எங்கள்குறச்சாதி
ஏந்திழையைச்சோரவிட்டு அமுதுபொசியோமே
பாரப்புலிகுத்திப் பலத்தவிருந்திடுவோம்
பத்தினியைவிலைக்குவிற்று அன்னம்பொசியோமே
எந்தனுடகுறத்திதனை யாரழைத்தாரோடி
இழுத்தவரைக்கண்டாலே இருதுண்டாய்ப்பிளப்பேன்
கன்னிதனைத்தொட்டிழுத்த காளையரைக்கண்டால்
கண்டதுண்டமாய்த்தரித்து கனத்தவுயிர்வதைப்பேன்
அரண்மனையும்ஆஸ்தானம் அடங்கலுந்தானிடித்து
அவனுடையதேவிகளை அழைத்திடுவேன்பெண்டாய்
கோபுரமும்கோயில்களும் கொத்தளமுமிடித்து
கொற்றவனுர்தேவிகளைக் கூடியணைந்திடுவேன்
கண்டேனேயாமாகில் கண்டதுண்டஞ்செய்வேன்
கன்னியரையழைத்துக்கொண்டு கடுகிமனைபோவேன்
வேறு-என்றுமவனுரைக்க இளங்கொடிமார்தான்கேட்டு
கால்நடுங்கிக்கைநடுங்கி கடுகெனவேயோடிவந்து
மானகரமாளும் மகாராசன்தேவியற்கு
தெண்டனிட்டுத்தாதியர்கள் சீக்கிரமாயேதுசொல்வார்
வணங்கிநமஸ்கரித்து மாதருக்கேதுசொல்வார்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
மயிலணையேஉன்னுடைய வாசற்படிகாத்திருந்தேன்
தேனின்குழலாளே தெருவாசல்காத்திருந்தேன்
அங்கேயொருகுறவன் அழுதுபுலம்பிவந்தான்
கட்டுவச்சிதன்னைத்தேடி கன்னக்குறவன்வந்தான்
ஆரணங்கைக்காணமல் அழுதுபுலம்பிவந்தான்
மயிலணையைக்காணமல் மன்னன்புலம்பிவந்தான்

அழுதகுரல்கேட்டு ஆணழகாவென்னென்றோம்
மன்னா அழுதவகை வாய்திறந்துசொல்லுமென்றோம் [ள்
அந்தக்குறவன் தானுரைத்த வார்த்தையைக்கேளுமென்றா
மலைக்குறவன் தானுரைத்த வார்த்தையைக்கேளுமென்றாள்
கட்டுவச்சி நாயகியைக் கைதொட்டிழுத்தவரை
குறத்தியைத்தானிழுத்து குகையிலடைத்தவரை
கண்டேனேயானால் கண்டதுண்டஞ்செய்வேனென்றான்
பார்த்தேனேயானால் பழுதுவருமென்றுரைத்தான்
அத்திபுரத்தையெல்லா மடியோடிடிப்பேனென்றான்
மகாராசன்பட்டணத்தை மண்ணோடுசாய்ப்பேனென்றான்
தங்கமதில்கோபுரத்தை தரையோடேசாய்ப்பேனென்றான்
ஆண்சிறையும்பெண்சிறையு மவனைப்பிடிப்பேனென்றான்
ஆணாய்ப்பிறந்தவரை அடப்பம்பிடிக்கவைப்பேன்
மன்னவர்களானாலும் மண்டைபிளந்திடுவேன்
தேவர்களானாலும் சிதறடிப்பேனென்றுரைத்தான்
அந்தவுரைகேட்டு ஆச்சியரேசொல்லவந்தோம்
குறவனுரைத்ததெல்லாம் கொம்பனையேகூறவந்தோம்
என்றுமிவளுரைக்க ஏதுசொல்வாள்பெருந்திருவாள்
மாநகரமாளும் மகாராசனானவர்க்கு
நீங்களுரையுமென்றார் நித்திலங்குபூமுடியார்
அந்தவுரைகேட்டு அலங்காரத்தாதியர்கள்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாதனத்தருகே சென்றுமேதெண்டனிட்டாள்
நீ-யார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றார்
ஆர்பணியுமல்ல அடியேன் திருப்பணிதான்
நீயிங்கேவந்தது எனக்கறியக்கூறுமென்றான்
தாதியவள்கைதொழுது தானங்கேயேதுசொல்வாள்
கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
தோள்விலங்குமார்விலங்கு தூக்காப்பெருவிலங்கு
விலங்கிட்டுமூலையில் வைத்தீரேமெல்லியரை
கட்டுவச்சிதன்னையல்லோ காவலில்வைத்தீரே
கட்டுவச்சிநாயகனார் கன்னக்குறவனவன்
பத்தினியைத்தேடியல்லோ பார்மன்னர்வீதிவந்தார்
பூங்குறத்திதன்கணவன் வந்தான்குறவனவன்

கன்னியரைத்தொட்டிழுத்துக் காவலிலேவைத்தவரை
பத்தினியைத்தொட்டிழுத்துப் பாரசிறைவைத்தவரை
கண்டேனேயாமானல் கண்டதுண்டஞ்செய்வேனென்று
பார்த்தேனேயாமானல் பற்றியிழுப்பேனென்றான் [ன்
இந்திரனேயானலு மினிவிடமாட்டேனென்றான்
சந்திரனேயானலும் சற்றும்விடேனென்றான்
தேவர்களானலும் சிதறடிப்பேனென்றுசொன்னான்
அந்தவுரைகேட்டு அறிக்கையிடவந்தேனென்றாள்
தேசத்தையாளும் திரியோதிரன்கேட்டு
எண்ணாதமெண்ணியல்லோ ஏங்கிமனந்தளர்ந்து
அருகிருக்குந்தோழனுக்கு ஆளனவனேதுசொல்வான்
காசிநாடாளுங் கருணப்பெருமாளே
குறத்திதனைத்தேடி வந்தானும்குறவனவன்
அந்தக்குறவனையு மடையுஞ்சிறையிலென்றான்
சீர்பதத்தையாற்றிச் சிறையிலடையுமென்றான்
கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
விலங்கிட்டுமன்னவனை விடுகிடங்கில்போடுமென்றான்
அந்தவுரைகேட்டு அங்குராயரேதுசொல்வார்
பீஷ்மர்முகம்நோக்கி வேந்தரெடுத்துரைப்பார்
இனியெட்டுதிங்களிலே இனியபோருண்டாக்கி
பாரதப்போரதனில் படைமன்னர்சேவகமும்
வாள்விஜயன்சண்டையிலே மன்னவர்கள்சேவகமும்
அர்ச்சுனன்சண்டையிலே அரசர்கள்தைரியமும்
பீமனுடசண்டையிலே வில்வேந்தர்ஆண்மைகளும்
சகாதேவன்சண்டையிலே சாமார்த்தியமுள்ளவன்காண்
வெளிப்படநாளாச்சே வேந்தர்படைமுகத்தில்
இதற்குள்ளேயிங்கொருபோர் ஏன்தேடிக்கொள்ளுகிறீர்
நாளைக்குப்போரு நடக்கவேதாமிருக்க
இப்போதும்போரு எழுப்பவும்நியாயமுண்டோ
குறவனைத்தான்பிடித்துக் கிடங்கிலடைப்பானேன்
கிளையிலேவாசம்பண்ணும் வனக்குறவர்எல்லாரும்
இவனைச்சிறையில்வைத்தால் எவர்கள்முடிப்போமோ
அத்திபுரமனைத்து மடங்கலுமண்ணுமோ
பஞ்சவர்கள்கையாலே மாளுதற்குமுன்பாக
குறவரிடகையாலே கொற்றவர்கள்மாளணுமோ
வனக்குறவர்கையாலே மன்னவர்கள்மாளணுமோ

குவலயத்தையாண்டமன்னர் குறவனுலேமாளனுமோ
வையகங்களுள்ளளவும் மாருதபேராகி
சூரியருள்ளளவும் தொல்லுலகில்பேராகும்
குறியுரைக்கவந்ததொரு குறத்தியவள் தனையும்
தேடியழைக்கவந்த தெளிந்தகுறவனையும்
அனுப்பிவிடும்அனுப்பிவிடும் அரசாளும்மன்னர்களே
வருத்தசென்னல்கைகொடுத்து மங்கையையனுப்பிவிடு
சுட்டசென்னல்கைகொடுத்துத் தோகையரைப்போகவிடு
போகவிடுமென்றுசொல்லி பொற்கருணர்தாமுரைத்தார்
அழகுள்ளமன்னர் அரசர்களும்தான்கேட்டு
கருணர்வுரைத்தது காரியந்தானென்றுசொன்னுர்
தேசத்தழகன் திரியோதிரன்கேட்டு
சிறையிலடைத்துவைத்த சீரானகுறத்திதன்னை
கல்லறையில்உள்வைத்த மெல்லியரைவெளியேவிடும்
கனத்தசென்னல்கைகொடுத்து தோகையரைப்போகவிடும்
சுட்டசென்னல்கைகொடுத்துத் தோகையரைப்போகவிடும்
போகவிடும்போகவிடும் பொற்கொடியாள் நாயகத்தை
என்றவுரைகேட்டு எழுந்தாரே தூதுவரும்
அரண்மனை எழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
குறத்தியிருப்பிடத்தே வந்தார்கள்கொற்றவர்கள்
கட்டிவைத்தசென்னல் வறுத்துமேகைகொடுத்து
கொள்ளும்பயறுமங்கே எடுத்துவறுத்தார்கள்
அத்தனையுங்கைபிடித்து ஆணழகர்வெளிவாரார்
சுற்றியவர்கைபிடித்துத் தோகைமயிலனையாள்
இட்டவிலங்கை யிணைவிலங்கைத்தட்டிவிட்டார்
போட்டவிலங்குதனைப் பொட்டெனவேதட்டிவிட்டு
வறுத்தசென்னல்கைகொடுத்து மங்கையரேபோகுமென்றார்
கொடுத்ததொருசென்னல்தனைக் கொட்டினுர்கூடைதனில்
வாங்கிநடக்கையிலே மயிலனையாள்ஏதுசொன்னுள்
குறம்-இன்னமொருபத்துதிங்கள் சென்றபிறகல்லோ
இவர்கள்முடிபூமியிலே யிறக்கவும்நாளாச்சு
பத்தினியாள்சாபத்தினுல் பார்மன்னர் நீங்கள்
பஞ்சவர்கள்கையாலே மாண்டுமடியப்போறீர்
அருங்கிளியாள்சாபத்தினுல் அரசரெல்லாம்நீங்கள்
ஐவருடகையாலே அனைவர்களுமாளப்போறீர்

என்றுசொல்லிகுறத்தியவள் ஏகிவழிநடந்தாள்
இளவிஜயன்முன்னேவந்தாள் இளங்குறத்திதானும்
அர்ச்சுனனைக்கண்டவுடன் அருங்கிளியாள்தானும்
ஆவலுடன்குறவர்முன்னே அருங்கிளியாள்சொல்வாள்
அத்திபுரவீதியிலே அருங்கிளியாள்வந்தேன்
அவ்வீதிஅரசரெல்லாம் அழைத்தாரல்லோபெண்டாய்
மண்மீதில்அறிவீரென்று மன்னவர்க்குவுரைத்து
மற்றுமொருவீதியிலே குறம்பாடிவந்தேன்
குறம்பாடிவீதிவரக் கொம்பனைமார்கேட்டு
கொச்சைக்குறத்தியென்று எனையழைத்தார்மனைக்கு
மகாராசன்தேவியராம் மயிலனையாள்தனக்கு
மங்கையவள்கேட்டுமல்லோ மயிர்விரித்துஅழுதாள்
அத்தையவள்காந்தாரி அருகாகவந்தாள்
அவள்தனக்குக்குறியுரைத்தேன் ஆணழகாகேளும்
மாபாவிகேட்டுமந்த மைந்தனுக்குவுரைக்க
பண்ணுளும்திரியோதிரன் வந்துகுறிகேட்டான்
அரசுமுடிமன்னனுக்கு ஆனகுறிசொன்னேன்
அவன்கேட்டுமன்னவனும் அடைத்தானேசிறையில்
கால்விலங்குகைவிலங்கு கனக்கவேதான்பூட்டி
காவலிலேவையுமென்றான் கள்ளனைப்போல்என்னை
மன்னன்வைத்தகாவலிலே மயிலனையாளிருந்து
மாயவரைக்கைதொழுது மாதுவெளியானேன்
வேறு-குறத்தியுரைத்ததெல்லாங் குறவனவன்கேட்டு
அரசாளும்மன்னனுக்கு ஆண்மைகளுண்டானால்
அவனொற்றராசருடன் எதிர்த்துப்போர்செய்யவேண்டும்
ஐவரையும்போலாகி வைத்தானோகாவலிலே
ஆரென்றுஎண்ணி யிருந்தானோஆணழகன்
கள்ளிதிருடியைப்போல் கட்டவந்தகாரியமேன்
விலங்கிட்டமன்னவனை வெட்டித்தலைதுணிப்பேன்
காவலிலேவைத்தவனைக் கண்டதுண்டஞ்செய்திடுவேன்
ஐவருடகையாலே அடியோடேமாளுதற்கு
காலங்களாச்சுதென்று கட்டழகன்போகலுற்றான்
குறவனுங்குறத்தியரும் கூடிவழிநடந்தார்
கட்டுவச்சிநாயகியும் கணவனுடனாக
அத்திபுரந்தாண்டி அங்கவளநாடுவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி

ஆறுசுனை தாண்டி அடர்ந்தவனந்தாண்டி
விராட நகற்கருகே வந்தாரிருவருமாய்
குறத்தியுருவழித்து கொம்பனையாள்போலேவாராள்
கட்டுவச்சிவேஷமாறி கன்னியருமங்கேவந்து
விராடத்தரசன்மனையில் வந்துமேவாழ்ந்திருந்தாள்
பணிப்பெண்ணைப்போல பாஞ்சாலியங்கிருக்க
காண்டாவனமெரித்த காளையருச்சுனனும்
குறவனுருமாறிக் கொற்றவனும்வடிவெடுத்து
பேடியைப்போலப் புகுந்தானரண்மனையில்
தர்மரைக்கண்டுமவன் சாஷ்டாங்கதெண்டனிட்டான்
பாஞ்சாலன்பெற்றதொரு பத்தினியாள் துரோபதையும்
குறத்திவடிவெடுத்து கொம்பனையாள்சென்றதுவும்
அத்திபுரத்தாற்கு ஆனகுறம்சொன்னதுவும்
கபடன் திரியோதிரன் காவலிலேவைத்ததுவும்
அத்தனையுந்தானுரைத்து அர்ச்சுனன்போய்நடந்தார்
ஐவரும்துரோபதையும் அங்கேயிருந்தார்கள்
மன்னவரும்தேவியரும் மகாராசன்பட்டணத்தில்
சுகமாகவாழ்ந்திருந்தார் சுந்தரப்பூமுடியார்
இந்தக்கதைதன்னை எழுதிப்படித்தவர்கள்
பாஞ்சாலிதன்குறத்தைப் பக்தியுடன்கேட்டவர்கள்
துரோபதைதன்குறத்தைத் துரிதமாய்ப்படிப்பவர்கள்
மாயன்பெருமாளின் மகாதேவர்கிருபையினால்
நற்பதவித்தானடைவார் நாட்டிலுள்ளயாவர்களும்
பெண்டுகளுக்குபயோகமாய்ப் பிரபலமாயிருக்குமென்று
கீர்த்திவிளங்கக் கிருபையுடனச்சிலிட்டார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திருப்பார்
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

## துரோபதை குறம்

முற்றிற்று.

---

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1934.